Registered at th G.P.O as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
33
இன்பம் தரும் 303 பத்திகளை
3003
உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்-2 மதுரை

போன். 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண் 49

மலர் 4 யாழ்ப்பாணம், பிலவ பங்குனி 21 ஆம் நாள ஷவ்வால் 27 (3-4-62) செவ்வாய்க்கிழமை இதழ 52

யாழ்ப்பாண

# மேயர் ஜேக்கப் மீது நம்பிக்கையில்லா பிரேரணை

## 9 அங்கத்தினர்கள் கொண்டுவருவர்

### சபையைக் கூட்டுமாறு ஆணையாளருக்கு கோரிக்கை

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் மேயர் திரு. எம். ஜேக்கப் மீது 9 மாநகர சபை அங்கத்தினர்கள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப் பிரேரணை செய்யவிருக்கிறார்கள். இது சம்பந்தமாக மாநகர சபைக் கூட்டத்தைக் கூட்டுமாறு அவர்கள் ஆணையாளரைக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

திருவாளர்கள்: டி.எஸ. துரைராஜா, பி. எஸ். சோமசுந்தரம், ஜே எஸ். அழகையா, என். டி. செல்லத்துரை, பி. எம். ஜோன், எஸ். ராஜரத்தினம், என். தேவபாலேந்திரன், ஏ. நடராஜா, டாக்டர் எஸ் ஏ. தர்மலிங்கம் ஆகியோரே சபைக் கூட்டத்தை நடத்துமாறு ஆணையாளரைக் கேட்டுள்ளனர். இது பற்றி இன்று ஆலோசனை நடத்தியபின், விரைவில் மாநகர சபையைக் கூட்டப்போவதாய் ஆணையாளர் திரு. டி. டி. ஜயசிங்கா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையில் மொத்தம் 15 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். யாழ்ப்பாண நகரின் முதலாவது கத்தோலிக்க மேயராக திரு. ஜேக்கப் கடந்த பிப்ரவரி 19-ம் திகதி ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## ஸிரியாவில் எல்லைகளும் துறைமுகங்களும் மூடப்பட்டன

### நாடு முழுதும் ஊரடங்குச் சட்டம்

கெய்ரோ, ஏப்ரல் 2

ஸிரியாவில் ராணுவ ஆட்சிக்கெதிராய் நடைபெற்ற கிளர்ச்சிக்கு ஏழு ராணுவ அதிகாரிகள் குழுவே தலைமை தாங்குகிறதென்றும், அலப்போவில் இவர்கள் நிலை கொண்டிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது. நாட்டின் இதர பகுதிகளிலும் தங்களுக்கு ஆதரவு இருப்பதாய் இவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் மறு உத்தரவு கிடைக்கும்வரை ஸிரியா பூராவும் எல்லைகளும், துறைமுகங்களும் மூடப்பட்டுள்ளன. நாடு முழுதும் ஊரடங்குச் சட்ம் பிறப்பிக்கப் பட்டுள்ளது. 5 பேருக்குமேல் கூடுவதைத் தடைசெய்தும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எகிப்தின் தலைமையில், விடுதலைபெற்ற அராபிய நாடுகளுடன் ஒன்று சேர்ந்து செயல்படவேண்டுமென கிளர்ச்சிக்காரர்கள் அறிவித்துள்ளனர். ஸிரியாவின் கௌரவத்துக்கும், தனித்தன்மைக்கும் பங்கம் ஏற்படாத வகையில் ஐக்கிய அராபியக் குடியரசுடன் இது பற்றி சர்வஜன்வாக்கெடுப்பு நடத்தப் படவிருப்பதாயும் புதிய கிளர்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர். பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தை நிறுத்தி தாங்கள் செயல்பட ஆதரவளிக்க வேண்டுமெனவும் கிளர்ச்சியாளர் கோரியுள்ளனர். ராணுவத்தில் பிளவு ஏற்பட்டிருப்பதின் காரணமாய் வடக்கு, மத்திய ஸிரியாவில் பலர் கொல்லப்பட்டிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

எகிப்துக்கும் ஸிரியாவுக்கும் பலமான நிரந்தர ஒற்றுமையை நிலை நாட்ட வழி செய்யப்போவதாய், 'சுயேச்சை ராணுவக் குழு' எனக் கூறிக் கொள்ளும் கிளர்ச்சிக்காரர்கள் அறிவித்துள்ளனர்.

## தனிப்பட்ட பாடசாலைகளை அரசாங்கம் ஏற்கவேண்டும்

### தேசிய கல்விக் கமிஷன் உபகமிட்டி சிபார்சு

கொழும்பு, திங்கள்

கட்டணம் வசூலிக்கப்படாத அல்லது வசூலிக்கப்படும் தனிப்பட்ட பாடசாலைகள் யாவற்றையும் அரசாங்கம் உடனடியாகப் பொறுப்பேற்க வேண்டும் என்று தேசிய கல்வி கமிஷனின் உபகமிட்டி, கமிஷனுக்கு சிபார்சு செய்துள்ளது.

தேசிய கல்வித்திட்டத்தின் கீழ், தனிப்பட்ட பாடசாலைகளுக்கு இப்போது இடமேதுமில்லையென்றும் கமிட்டி தெரிவித்துள்ளது.

கட்டணம் வசூலிக்கப்படாத தனிப்பட்ட பாடசாலைகளிலுள்ள தளபாடங்களை பொறுப்பெடுத்து, அவற்றை அரசாங்க பாடசாலைகளில் விநியோகிக்க அரசாங்கம் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்காமலிருப்பது வருந்தத்தக்கது என்றும் கமிட்டி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

---

### மத்திய அரசாங்கத்துக்கு 7 அடுக்கு கட்டிடம்

சென்னை, ஏப்பரல் 2

ரூ 95 லட்சம் செலவில் ஏழு அடுக்குகள் கொண்ட மத்திய அரசாங்கக் காரியாலயம் ஒன்று சென்னையில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

### நேருஜீ குணமடைந்தார்

புதுடில்லி, ஏப்ரல் 2

பிரதம மந்திரி நேருவின் தேக நிலையில் பூரண அபிவிருத்தி ஏற்பட்டுவிட்டதாய் இன்று பகல் 11-30-க்கு வெளியான வைத்திய அறிக்கை கூறியது. நேற்றிரவு அவர் நன்றாய்த் தூங்கினர். இப்போது தெம்புடன் காணப்படுகிறார் என்றும், இன்றும், நாளையும் அவரது நிகழ்ச்சிகள் ரத்துச்செய்யப்பட்டுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டது. இனி வைத்திய அறிக்கை வெளிவரமாட்டாது.

### புதிய லோக சபை

புதுடில்லி, ஏப்ரல் 2

புதிய லோக சபை அமைக்கப்பட்டிருப்பதுபற்றி தேர்தல் கமிஷன் முறைப்படி இன்று அறிவித்தது. புதிய சபையில் 283 பேர் புதிய எம். பிக்களாகும் இவர்களில் 36 பேர் பெண்கள்.

### யசாவதி கொலை வழக்கில் எதிரிக்கு மரண தண்டனை

கொழும்பு, திங்கள்

கொட்டாவீதி 163-ம் இலத்தில் சமையற் காரியாய் பணியாற்றிய யசாவதி என்ற அழகிய இளம் பெண்ணைக் கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்ட வழக்கில், எதிரியான சட்டின்சிங்கோ என்பவருக்கு அசைஸ் கமிஷனர் திரு. ஸ்ரீஸ்கந்தராஜா இன்று மரண தண்டனை விதித்தார். எதிரி குற்றவாளி என ஜூரிகள் ஏகமனதாய்த் தீர்ப்பளித்தனர்.

---

### சட்டவிரோத குடியேற்றக்காரர் தற்கொலை

கொழும்பு, திங்கள்

தலைமன்னார் முகாமில் நாடுகடத்தப்படவிருந்த சட்டவிரோத குடியேற்றக்காரரான ஆறுமுகம் என்பவர், நேற்று தற்கொலை செய்து கொண்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் 13-ம் திகதி முகாமுக்கு கொண்டுவரப்பட்டாரென்றும், நேற்று அங்குள்ள பனைமரமொன்றில் ஏறி, சுமார் 40 அடி உயரத்திலிருந்து கீழே விழுந்து தற்கொலை செய்து கொண்டாரென்றும் கூறப்படுகிறது.

### 18 கைதிகளுக்கு மன்னிப்பு

கொழும்பு, திங்கள்

சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்று, 18 சிறைக் கைதிகளுக்கு மன்னிப்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

### மலைக் குகையில் டி' மெல்லைத் தேடினர்!

கொழும்பு, திங்கள்

முன்னாள் கடற்படைத் தலைவர் ராய்ஸ் டி' மெல்லைத் தேடும் பொருட்டு யட்டாம்பிட்டியவிலுள்ள பேகியன் மலைக் குகையில் புலத்சிங்கள பொலிசார் திடீர் சோதனை நடத்தினர். நேற்று சப் இன்ஸ்பெக்டர் எச். வி. டி. ஹமுது, வெத்கன கிராம விதானை ஆகியோர் தலைமையில் இத்தேடுதல் நடைபெற்றது. தலைமறைவாய் இருக்கும் டி' மெல்லைக் கைது செய்வதற்கு ரூ. 1000 பரிசாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### டில்லியில் மலகாசி அதிபர்

புதுடில்லி, ஏப்ரல் 2

மலகாசி குடியரசு அதிபர் தமது மனைவியுடன் இன்று புதுடில்லி வந்தார். போர்மோஸா செல்லும் வழியில் அவர் இங்கு விஜயம் செய்துள்ளார்.

### அல்ஜியர்ஸில் கொள்ளை

அல்ஜியாஸ், ஏப்ரல் 2

அல்ஜியர்ஸில் 6 பிளாஸ்டிக் குண்டுகள் வெடித்தன. ஒருவர் காயமடைந்தார். ஆயுதம் தாங்கிய ஒருகோஷ்டியினர் தபால் ஆபீஸ் ஒன்றை உடைத்து 7000 பவுன்களை கொள்ளையடித்துச் சென்றனர்.

---

### மே. நியூகினியில் இந்தோனேஷிய படையெடுப்பு!

ஜாகர்தா, ஏப்ரல் 2

மேற்கு நியூகினியில் பல இடங்களில் இந்தோனேஷியத் துருப்புக்கள் கரையிறங்கியிருப்பதாய் இந்தோனேஷிய வட்டாரங்கள் அறிவித்துள்ளன ஆனால் டச்சு தரப்பில் இது மாற்றப்பட்டது.

---

### ராதாகிருஷ்ணனுக்கு பாராட்டு

புதுடில்லி, ஏப்ரல் 2

உபராஷ்ட்ரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் சென்ற 10 ஆண்டுகளாக ராஜ்யசபையின் தலைமையை ஏற்று நடத்திய விதத்திற்கு ராஜ்யசபை அங்கத்தினர்கள் பாராட்டுத் தெரிவித்து ராஷ்ட்ரபதியாக கூடிய சீக்கிரம் அவர் ஆகப் போவதற்கும் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கடை புதிதாக ஆரம்பிப்போருக்கு அருந்தருணம்.கடைக்குத் தேவையான 2 பெரிய அலுமாரிகள், ருக்கைகள், அலுவலக மேசைகள் முதலியன விற்பனைக்குண்டு. மலிவு விலை. தொடர்பு கொள்க. ஆர். என். இராசரத்தினம், லங்கா ரேடிங் கோப்பிரேசன், 31-33, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### திருமணம்

பருத்தித்துறைக் கிராம விதானையார் திரு. என். அம்மையாபிள்ளை அவர்களுக்கும் பருத்தித்துறை வி. எம். தெரு செல்வி மங்கையர்க்கரசி கணபதிப்பிள்ளை அவர்களுக்கும் தொண்டமனாறு செல்வச்சந்நதி கோவிலில் ஏப்ரல் மாதம் 9-ந் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கும் 10 மணிக்குமிடையில் திருமணம் நடைபெறும். ஆர்த்தியடியிலுள்ள மணமகன் இல்லத்தில் அன்று மாலை 5 மணிக்கு விருந்துபசாரம் நடைபெறும். உறவினரும் நண்பர்களும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

### ORDER NISI

In the District Court of Jaffna

In the matter of the Intestate Estate of the late Sithamparan Kanthan of Chankanai Deceased.

Kanthan Mylu of Chankanai Petitioner.

Testamentary Jurisdiction } No. 1114

Vs

1. Kandan Vallipuram, Barber Saloon, Vavuniya.
2. Kandan Chinniah of Maviddapuram Respondents

This matter coming on for disposal before V.M. Comarasamy Esquire, Acting District Judge, Jaffna on the 23rd day of February 1962 in the presence of Mr S.T. Nadarajah, Proctor on the part of the petitioner and the affidavit and petition of the petitioner having been read:

It is ordered that letters of Administration over the estate of the said deceased be issued to the petitioner as the son of the deceased unless the respondents or and other person or persons shall on or before the 11th day of April 1962 appear before this court and show sufficient cause to the satisfaction of this court to the contrary. The 23rd day of Feburay 1962.

Drawn by:-
Sgd. S. T. Nadarajah
Proctor for Petitioner.

Sgd. Sivagnanasundram
*District Judge.*

### 'காதல் போயிற் சாதல்'

அம்பாந்தோட்டை, திங்கள்

ஏ. ஆரியதாசா என்னும் 25 வயது இளைஞன் 'அசெட்டிக் அசிட்' உட்கொண்டதால் அம்பாந்தோட்டை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மரணமானார்.

காதலில் ஏமாற்றங்கண்டதால் ஆரியதாசா 'அசிட்' உண்டு தம்மை மாய்த்துக் கொண்டார் என அறியப்படுகிறது.

# 8 சதமாக இருந்த வெங்காயத்தின் விலை

## கட்டுப்பாட்டு விலை 28 சதமாகி உள்ளது

**—கூட்டுறவு அதிகாரி**

சாவகச்சேரி, ஞாயிறு

"1953 ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் 5,000 அந்தர் வெங்காயம் மட்டுமே, உற்பத்தி செய்யப்பட்டது அந்தக்காலத்தில் ஒரு இருத்தல் வெங்காயத்தின் விலை எட்டு சதம்தான். கடந்த நன்கு ஐந்து வருடங்களில் ஒரு ருத்தல் வெங்காயத்தின் காட்டுப்பாட்டுவிலை 28 சதமாக மாற்றப் பட்டது இவ்வேளையில் 250,000 அந்தர் வெங்காயம் உற்பத்தி செய்யப் பட்டது.

இவற்றை உற்று நோக்கும் பொழுது, உற்பத்தி, மாக்கெற் விலைதான் தங்கி இருக்கிறது என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. கூட்டுறவு இயக்கத்துடன் விவசாகிகள் திறந்த மனதுடனும், நேர்மையுடனும் ஒத்துழைப்பார்களேயானல், தற்பொழுது எழுந்திருக்கும் பொருளாதார, பிரச்சனைகள் தானகவே மறைந்து விடும்."

அண்மையில் மட்டுவிலில் நடைபெற்ற முதலாவது சாவச்சேரி கூட்டுறவு தொகுதி பண்ணை அங்குராப்பணக் கூட்த்தில் யாழ்ப்பாணம் வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி உதவிக் கமிஷனர் திரு. எஸ். ஆசிர்வாதம் பேசகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கூட்டுறவுப் பண்ணையின் தலைவராக திரு. மகேஸ்வரனும் செயலாளராக திரு. எஸ். துரைராஜாவும் தெரிவு செய்யப்பட்டனர். ஏழு பேர் கொண்ட கமிட்டியொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## லோகசபையில் 32 பெண்கள்

புதுடில்லி, எப்ரல் 2

லோகசபையின் 494 ஸ்தானங்களில் 489 அங்கத்தவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். மிகுதி ஐந்து ஸ்தானங்களில் ஒன்று பஞ்சாபிலும் மற்ற நான்கு ஹிமாசல பிரதேசத்திலும் தெரிவு செய்யப்படவேண்டும்.

489 லோகசபை அங்கத்தவர்களிலும் 293 அங்கத்தவர்கள் லோகசபைக்குப் புதியவர்கள். 32 அங்கத்தவர்கள் பெண்கள்.

# லஞ்சம் வாங்கும்பொழுது அகப்பட்டார்

## மீன்பிடி இலாகா உத்தியோகத்தர் தற்காலிக வேலை நீக்கம்

யாழ்ப்பாணம், திங்கள்

ஊர்காவற்றுறையிலுள்ள மீன்பிடி இலாகாவைச் சேர்ந்த ஒரு உத்தியோகத்தர் லஞ்சம் வாங்கியதாகவும் கையும் மெய்யுமாக இவர் பிடிபட்டதாகவும் இதன் விளைவாக இவர் வேலையிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

ஊர்காவற்றுறையிலுள்ள மீன்பிடி இலாகாவைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் மீன்பிடியாளர்களிடம் கைலஞ்சம் வாங்குவதாக யாழ்ப்பாணம் பொலிஸ் சுப்ரீண்டனுக்கு நெடுந்தீவிலிருந்து புகார்க் கடிதங்கள் கிடைத்தன.

இப்புகார் சம்பந்தமாக உண்மையைக் கண்டுபிடிப்பதற்காக இன்ஸ்பெக்டர் டி. எச். பி. ஜோஹரனை பொலிஸ் சுப்பிரீண்டன்ட் ஊர்காவற்றுறைக்கு அனுப்பிவைத்தார்.

25 ரூபாய் கொண்ட ஒரு கடித உறையை மீன்பிடியாளர் ஒருவர்மூலம் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தருக்கு இன்ஸ்பெக்டர் ஜோஹரன் அனுப்பியதாகவும் அந்த மீன்பிடியாளர் அதை லஞ்சமாகக் கொடுத்தபொழுது அவர் அதை ஏற்றுக்கொண்டதாகவும் அப்பொழுது இன்ஸ்பெக்டர் ஜோஹரன் அவரைக்கையும் மெய்யுமாகப் பிடித்துக்கொண்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்ட அதிகாரி வேலையிலிருந்து நிறுத்திவைக்கப்பட்டுள்ளார்.

## இன்று உங்கள் பலன்

-சோதிட ஆசான் செ. தெல்லியூர்-

பிலவ ஆண்டு பங்குனித் திங்கள் 21-ந் திகதி செவ்வாய்க்கிழமை (3-4-62) ஹிஜ்ரி வருடம் 1381, ஷவ்வால் மாதம் 27-ம் பிறை.

இன்று அபரட்சதிரயோதசி காலை 6-22 வரை. பின்னர் சதுர்த்திபின்னிரவு 3-59வரை. அதன்பின்னர் அமாவாசை, முன்னிரவு 7-18 வரை பூரட்டாதி. அதன்பின்னர் உத்தரட்டாதி. மரணயோகம். இராகுகாலம் பிற்பகல் 3-10 மணிமுதல்4-40 வரைவரை.

அச்சுவினி, பரணி, கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிடம் ஆகிய ஆறு நட்சத்திரங்களுக்கும் இன்று படுபட்சி நாளாகையால் சுபகருமங்களை இவர்கள் மேற்கொள்ளுதலாகாது.

பூரட்டாதி - உத்தரட்டாதி:- இவர்களுக்கு இன்று பிதுர் வழிசிந்தனை, செய்கருமத்தடை, பகைவரால் கஷ்டம், தெய்வ வழிபாடு, கடன்தொல்லை ஆகியன காணப்படுகின்றன.

மேடம்: தெய்வவழிபாடு, நிம்மதி, பணச்செலவு, தேகநலம்.

இடபம்: அலைச்சல், நல்லோர்சந்திப்பு, கடன்படல், கடும்உழைப்பு.

மிதுனம்: நண்பர் உதவி, முதியோர் சிந்தனை, மாதாவழி உதவி, தைரியம்.

கடகம்: பிதுர்வழிசிந்தனை, சுபசெய்தி, வாக்குவன்மை, மாதர்நட்பு.

சிங்ஹம்: குடும்பசுகக்குறைவு, தொழிற்சிந்தனை, சகோதர உதவி, வீண்சிந்தனை.

கன்னி: அவசரநடத்தை, பணவிவகாரம், நல்லுறவு, தெய்வவழிபாடு.

துலாம்: தருமவழி செலவு, பிரயாணசுகம், கடும்உழைப்பு, புதியசிந்தனை.

விருச்சிகம்: பெரியோர் சிந்தனை, குடும்பநலம், பொருள் வரவு, மாதர்நட்பு.

தனு: நல்லோர் தரிசனம், பிதுர்வழி யோசனை, தொழிற் சிந்தனை, தேகாரோக்கியம்.

மகரம்: மாதுருவழி உதவி, மதிப்புக்குலைதல், தொழில் வெற்றி, கடும்உழைப்பு.

கும்பம்: முதியோர் சிந்தனை, பணஉதவி, செய்காரியதடை, பிதுர்வழி உதவி.

மீனம்: பகைவர் எதிர்ப்பு, தெய்வவழிபாடு, கருமவெற்றி, மாதர்நட்பு.


தாயும் மகளும் நவ நாகரீகமாகத் திகழ

உகந்தது ஜம்பிங் பிஷ்

பிரிண்டட் பேப்ரிக்



தாயும் மகளும் நவநாகரீகமாக உடுத்துவதற்கு இந்தப் புதிய பேப்ரிக்குகளை நிச்சயம் நீங்கள் தேர்ந்தெடுப்பீர்கள். இந்த அச்சடி கேம்பிரிக்குகள் பிரகாசமானவை, கனமில்லாதவை, நீடிய காலம் உழைப்பவை. குறைந்த விலையில் இடைப்பவை. பல கலர்களிலும், பல்வேறு டிசைன்களிலும் கிடைப்பவை. இன்றே ஜம்பிங் பிஷ் பேப்ரிக்குகளில் நீங்களும் தைத்து உடுத்துங்கள் —இது சிக்கன வாழ்விற்கு ஸி. டப்ளியூ. ஈ. அளிக்கும் அன்பளிப்பு.

ஏக விநியோகஸ்தர்கள்:

சீ. டப்ளியூ ஈ.

கிடைக்குமிடங்கள்: சி. டப்ளியூ. ஈ. இலாகா, ஸ்டோர்; கோட்டை, கொழும்பு மக்கலம் ரோட், மெயின்வீதி, புறக்கோட்டை, மருதானை மற்றும் வெளியூர்கள்.

ஞாபகமிருக்கட்டும்- CWE ஸி. டப்ளியூ- ஈ. தரத்திலும் ரகத்திலும் உயர்ந்த பொருட்களையே உங்களுக்கு அளிக்கின்றது

# நேபாளத்தில் 30 பேரின் சொத்துக்கள் பறிமுதல்

காட்மாண்டு, ஏப். 2

நேப்பாளத்தின் முன்னாள் உதவிப் பிரதமர், எதிர்க் கட்சித் தலைவர், மாஜி மந்திரிகள் இருவர் உட்பட முப்பது பிரஜைகளின் சொத்துக்களைப் பறிமுதல் செய்யும்படி நேப்பாள அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

நேப்பாளத்துக்கு வெளியே உள்ள இந்த முப்பது நேப்பாளப் பிரஜைகளையும் நேப்பாளத்துக்கு வந்து சரணடையும்படி நேப்பாள அரசாங்கம் உத்தரவிட்டிருந்தது. மூன்று வார காலத்துக்குள் சரணடையாவிட்டால் அவர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படுமென்று சென்ற மாதத்தில் நேப்பாள அரசாங்கம் அறிவித்திருந்தது. இந்தக் கெடுவுக்குள் அவர்கள் சரணடையாததால் அவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்வதற்கு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

# இலங்கையர் ஆயுள் நீடிப்பு

கொழும்பு, திங்கள்

இலங்கை வாழ் மதிதரின் சராசரி ஆயுள் 66 ஆகியுள்ளது எனச் சமீபத்தில் சுகாதார டைரக்டருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட புள்ளி விபரப் பட்டியலில் கூறப்பட்டுள்ளது. கடந்த டிசம்பரில் வெளியான புள்ளி விவர அட்டவணையின்படி சராசரி ஆயுள் 62.5 வருடங்களாக இருந்தது.

சுகாதார அதிகாரிகள் சமீபத்தில் கூட்டிய மகாநாடொன்றில், இலங்கை வாழ் மக்களின் சராசரி ஆயுள் நீடித்துள்ளதாகப் பலவகையில் அத்தாட்சிப் படுத்தப்படுகிறதென்று சுகாதார டைரக்டர் கூறினர்.

# "அனைவருக்கும் பொதுவானது வட மொழி"

## சமஸ்கிருத சம்மேளன ஆண்டு விழாவில் பேச்சு

தெல்லிப்பழை, திங்கள்

"வட மொழி பண்டைக் காலத்தில் உலகின் பொது மொழியாகவிருந்தது. வட மொழியைத் தேவ பாஷை என்று குறிப்பிடுவதிலிருந்தே இது தெரிகிறது. வளம்பட்ட ஓர் மொழியாகவும், பல உயரிய சிறப்புக்களையுடையதாகவும் வட மொழி விளங்கி வந்துள்ளது. இந்நாளில் வட மொழியை ஒரு சாரார் பேசும் மொழியாகக் கருதுதல் கூடாது. அனைவருக்கும் பொதுவான வளமான மொழி வட மொழியாகும். வடமொழியை ஆலயத்திற்கு மட்டும் என்று கூறுதல் பொருந்தாது"

இவ்வாறு வியாகரண சிரோமணி திரு. கே. சீதாராம சாஸ்திரி வட இலங்கை சமஸ்கிருத சம்மேளன வருடாந்த விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி வட மொழி ஆசிரியர் பிரம்மஸ்ரீ தி. விசுவநாதக்குருக்கள் பேசுகையில் கூறியதாவது:-

வட மொழி, தென் மொழிகளிலுள்ள சிறப்புக்களை ஒப்பிடுகையில், வட மொழியும் தென் மொழியும் நமக்கு இரு கண்கள் போன்றன என்பது தெரியவரும். அவற்றுள் ஒன்றினைப் போற்றி, மற்றதனைத் தூற்றுதல் ஒரு கண்ணைப் போற்றி மறு கண்ணைக் கெடுப்பது போலாகும். தேனின் சுவையையும், சர்க்கரையின் சுவையையும் தனித்தனி சுவைத்திருந்தோர், இரண்டினையும் கலந்து சுவைப்பாராயின் எத்தகைய இன்பம் பெறுவர் என்பதைச் சொல்லல் மிகை. வட மொழியிலும் தென்மொழியிலும் எத்தனையோ கற்பனைச் சுவைகள் ஒரே தன்மையுடையனவாயும், பேரின்பம் பயப்பனவாயும் காணக்கிடக்கின்றன.

திரு. கி. சுப்பிரமணியன் பேசுகையில் "வட மொழி சங்கீதம், சாகித்தியம், நாட்டியம் முதலியவற்றுக்கு இன்றியமையாது வேண்டப்படும் எல்லா நாதங்களையும் தன்னகத்தே கொண்டு மிளிருவதனால் அதனைத் தேன் மொழி என்று கூறுவதில் இழுக்கில்லை" என்றார்.

பொதுக் காரியதரிசியினால் வருடாந்த அறிக்கையும், பரீட்சைக் காரியதரிசியினால் பரீட்சைப் பெறுபேறுகள் பற்றிய அறிக்கையும் சபையில் சமர்ப்பிக்கப்பட்டன.

1961-ம் ஆண்டு பம்பாய் பாரதிய வித்தியாபவனத்தினால் நடாத்தப்பட்ட பிரவேச, பிராரம்ப பரீட்சைகளில் சித்தியடைந்தவர்களுக்குத் தராதரப் பத்திரங்களும், புத்தகப் பரிசில்களும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி உப அதிபர் திரு. வி. சிவசுப்பிரமணியத்தினால் வழங்கப்பட்டன. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவரால் இனிய முறையில் வட மொழி துதிப்பாடல்களும், வட மொழிச் சம்பாஷணை, உரை நடை வாசிப்பு ஆதியனவும் நிகழ்ந்தன.

புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. கே. சீதாராம சாஸ்திரி, உப தலைவர்கள்: திருவாளர்கள் கி. சுப்பிரமணியன், பி. ராமையர், க. வை. ஆத்மநாத சர்மா, தி. விசுவநாதக்குருக்கள், மு. ஞானப்பிரகாசம், பொதுக் காரியதரிசி: திரு. கு. பாலசுந்தரக் குருக்கள், பரீட்சைக் காரியதரிசி திரு. எஸ். பஞ்சாட்சர சர்மா: தனாதிகாரி: திரு. எஸ். ஆர். குமரேசன், உப காரியதரிசி. திரு. ஆர். எஸ். கந்தசாமி.

# வடக்கு சிரியாவில் புதிய புரட்சி

## தனி அரசாங்கம் அமைக்கப்பட்டது

லண்டன், ஏப். 2

வடக்கு சிரியாவில் புதிய புரட்சி ஒன்று ஏற்பட்டுவிட்டதாகவும் மூன்று அதிகாரிகளைக்கொண்ட சபையொன்று அங்கு தனி அரசாங்கம் அமைத்துள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

சிரியாவின் ராணுவ ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமென்று இந்த புதிய புரட்சி சபையினர் தெரிவித்துள்ளனர்.

இதற்குமுன் டமாஸ்கஸ் ரேடியோ மூலம் சிரியா அரசாங்கம் அடிக்கடி சிரியா மக்களுக்கு விசேஷ வேண்டுகோள் விடுத்தது.

சிரியாவின் ஐக்கியத்தைப் பாதுகாக்க ராணுவ அரசாங்கத்துக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் தருமாறு அரசாங்கம் வேண்டுகோள் விடுத்தது.

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சிரியாமீது தாக்குதல் நடத்த இஸ்ரேலியர்கள் முயற்சி செய்வதாக சிரியா ராணுவ அரசாங்கம் தெரிவித்தது.

சிரியாமீது வெளியிலிருந்து தாக்குதல் நடைபெற்றால் சிரியாவுக்கு உதவி புரிய ஐக்கிய அரபுக் குடியரசு தயாராக இருக்கிறதென்று அரபுக்குடியரசு அறிவித்துள்ளது.

# தமிழ் நாட்டின் கல்வி முறை

சென்னை, ஏப்ரல் 2

தமிழ் நாட்டின் கல்விமுறையை ஆராய ஒரு கமிட்டி நியமிக்க வேண்டுமென்று ஆசிரியர்கள் சங்கமொன்று கோரியுள்ளது.

வேலைபார்த்துக் கொண்டு படிக்க வசதி இருக்கக் கூடிய முறையில் காலை, மாலை வகுப்புக்கள் இருக்க ஒழுங்கு செய்யப்பட வேண்டுமென இந்தச் சங்கம் யோசனை கூறியுள்ளது

# காங்கோவில் வேலை நிறுத்தம்

லியப்போல்ட்வில்லி, ஏப்ரல் 2

காங்கோ அரசாங்கத்தின் சிக்கன நடவடிக்கைகளுக்கு ஆட்சேபம் தெரிவிக்கு முகமாக லியப்போல்ட் வில்லியில் இன்று 48 மணி நேர பொது வேலை நிறுத்தம் நடைபெறவிருக்கிறது.

இந்த வேலை நிறுத்தத்தை முறியடிப்பதற்காக அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. "அவசியமேற்பட்டால் பலாத்காரத்தை உபயோகித்து நிலைமையைச் சமாளிப்போம்" என்று காங்கோ உள்நாட்டுமந்திரி தெரிவித்தார்.

# சுவிட்சர்லாந்து அணு ஆயுதங்களை வாங்கலாம்

## வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதி

லண்டன், ஏப் 2

சுவிட்சர்லாந்தில் அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதையோ அணு ஆயுதங்களை வாங்குவதையோ தடை செய்வதற்கு அரசியல் திட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டுமென்ற யோசனையை ஜனவாக்குக் கணிப்பின் மூலம் சுவிட்சர்லாந்து மக்கள் நிராகரித்துவிட்டனர்.

அணு ஆயுதத் தடையை விரும்பும் சங்கத்தினர் இந்த வாக்குக் கணிப்புக்கு ஒழுங்கு செய்தனர். அரசியல் திட்டத்தில் திருத்தம் செய்து, அணு ஆயுதங்களை சுவிட்சர்லாந்து உபயோகிப்பதைத் தடை செய்ய வேண்டுமென்ற யோசனையை நான்கு பகுதிகள் மட்டுமே ஆதரித்தன.

சுவிட்சர்லாந்தில் வாக்காளர்களெல்லோரும் ஆண்கள் தான்.

அணு ஆயுதங்களைத் தயாரிக்கவோ வாங்கவோ தற்பொழுது திட்டமெதுவுமில்லையென்றாலும் நாட்டின் பாதுகாப்பை உத்தேசித்து வருங்காலத்தில் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதற்கு இந்த வாக்குக் கணிப்பு அங்கீகாரமளித்துவிட்டதென்று சுவிட்சர்லாந்து உள்நாட்டு மந்திரி தெரிவித்தார்.

இந்த ஜனவாக்குக் கணிப்பு பகுத்தறிவுக்கு ஒரு வெற்றி என்று சுவிஸ் பிரதமர் தெரிவித்தார்.

# அந்தகர் ஒரு கோடி

லண்டன், ஏப்ரல் 2

உலகில் கண்பார்வையில்லாதவர்கள், சுமார் ஒரு கோடி பேர் உள்ளனர். இவர்களில் 6 லட்சத்து50,ஆயிரம் பேர்குழந்தைகள் என்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

# ஆசிய ஆபிரிக்க கிராம சீரமைப்பு

புதுடில்லி, ஏப்ரல் 2

ஆபிரிக்க, ஆசிய நாடுகளின் கிராம சீரமைப்புக்கென ஒரு ஸ்தாபனம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஸ்தாபனத்தின் தலைவராக எகிப்தியர் ஒருவரும் தலைமைக் காரியதரிசியாக இந்தியாவைச் சேர்ந்த திரு. கே. டி. கர்மாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# 'வீட்டுக்கொரு நெசவாலை நிறுவ வேண்டும்'

## மாதர்களுக்கு உடுப்பிட்டி எம். பி. கோரிக்கை

உடுப்பிட்டி, திங்கள்

"மானங்காக்கும் மறவுணர்ச்சியற்றவன் தமிழனுமல்ல; மனிதனுமல்ல. உயிர் வாழ வேண்டியதற்கு உணவு அவசியம் தான். ஆனால் மானத்தின் பின் தான் உணவுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். ஆகவே தான் மறவுணர்ச்சியைக் குழந்தைகளுக்குத் தமது பாலுடன் ஊட்டுவதுடன், வீட்டுக்கொரு நெசவாலை நிறுவும் காந்தீய புனிதப்பணியில் தாய்க்குலம் ஈடுபட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்."

இவ்வாறு ஞாயிறு பிற்பகல் நெல்லியடியில் "சிவபவான் சங்க"த்தைத் திறந்து வைத்துப் பேசிய உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் கூறினார்.

திரு. சிவசிதம்பரம் மேலும் பேசுகையில் சுவிட்சர்லாந்து, கியூபா போன்ற சிறிய நாடுகளில் மக்களின் பொதுநல உணர்ச்சியும், தியாக சிந்தையும், அயராத உழைப்பும் இந்நாடுகளின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப உதவுமாயின், இலங்கையில் ஏன் அவ்வாறு நடக்க முடியாதெனக் கேட்டார்.

இறுதியில் நடைபெற்ற உத்தியோகத்தர் தெரிவில், செல்வி சிற்றம்பலம் சோதிமதி தலைவியாகவும், திருமதி கணபதிப்பிள்ளை அன்னலட்சுமி செயலாளராகவும், செல்வி அருளப்பு கிரேஸ் தனாதிகாரியாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

# ஸ்தலஸ்தாபன சபைகளிடம் கல்லோயா நிர்வாகம்

கொழும்பு, திங்கள்

கல்லோயா மாவட்டத்தை நிர்வகிப்பதற்கு ஏழு கிராம சபைகளையும் இரண்டு பட்டின சபைகளையும் அமைப்பதற்கு ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனரின் சிபார்சின்மீது விடமைப்பு, ஸ்தலஸ்தாபன மந்திரி அங்கீகாரமளித்துள்ளார்.

ஐந்து கிராமசபைகளுக்கான தேர்தல் ஜூலை மாதத்திலும் மற்ற இரண்டு கிராமசபைகளுக்கான தேர்தல் ஆகஸ்ட் மாதத்திலும் நடைபெறவிருக்கின்றன.

அம்பாறை, உகனை ஆகிய இரண்டு இடங்களிலும் தனித்தனி அமைக்கப்படவிருக்கும் பட்டினசபைகளுக்கான தேர்தல் பின்னர் நடைபெறும்.

இப் பகுதியில் சென்ற பத்து வருடகாலமாக குடியேற்றவாசிகள் நிரந்தரமாக வசித்து வருவதால் இப் பகுதியில் தேர்தல் நடைபெறுவதில் சிரமமெதுவும் இருக்கமாட்டாது என்று ஸ்தலஸ்தாபன சேவைப் பகுதியினர் தெரிவித்தனர்.

# வைகியோதீவு விடுபட்டதா?

ஜாகர்த்தா, ஏப். 2

மேற்கு இரியானிலிருந்து 25 மைல் தூரத்திலுள்ள வைகியோ என்ற தீவை இந்தோனேஷிய தொண்டர்படையினர் விடுவித்துவிட்டதாக இந்தோனேஷிய அரசாங்கம் நேற்றிரவு மீண்டும் அறிவித்தது.

ஆனால் இச்செய்தி வெறும் பொய்ப்பிரசாரம் என்றும் வைகியோதீவு கைப்பற்றப்படவில்லையென்றும் டச்சுஅரசாங்கம் மறுத்தது.

# துறைமுகவேலை முழுவதையும் மேற்கொள்ளதொழிற்சங்கம் தீர்மானம்

கொழும்பு, திங்கள்

திருக்கோணமலை துறைமுகத் தொழிலாளரின் பொது சேவைக் கூட்டுறவுச் சங்கத்தினர், துறைமுகத்தின் முழு வேலைகளையும் வெகு விரைவில் தாமே ஏற்றுச் செய்ய முடிவு செய்துள்ளார்கள்.

தொழிலாளர் பொது சேவைக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. ஈ. ஆர். எஸ். ஆர். குமாரசுவாமி தமது வருடாந்த அறிக்கையில் சங்கத்தின் இந்த தீர்மானம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

தனிப்பட்ட வேலை ஒப்பந்தக்காரருடன் தமது சங்கத்தினர் ஆரம்பத்தில் அதிகம் போட்டியிட வேண்டியிருந்ததாகவும் தலைவர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். திருக்கோணமலைத்துறைமுகத்தில் வந்து சேரும் கப்பல்களிலிருந்து உணவுப்பொருள்களை இறக்கும் வேலைகளை மேற் கொள்ள முன்வின்ற தனிப்பட்ட வேலை ஒப்பந்தக்காரர்கள், திருக்கோணமலை அரசியல் வாதிகள், துறைமுகத் தொழிலாளர் சங்கம் ஆகியோரின் போட்டிகளையும் தமதுசங்கம்எதிர்த்துபோராட வேண்டியிருந்ததெனத் தலைவர் தெரிவித்துள்ளார். ஆனால்வர்த்தக, உணவுக் கப்பல், மந்திரி, நிதி மந்திரி, தொழில் மந்திரி ஆகியோரின் உதவியால், தமது சங்கம் முறியடிக்க முடிந்ததாகத்தலைவர்தமது அறிக்கையில் குறிப்பிட்டார்.

### மணி வாக்கு

உலக மக்கள் நாடுகின்ற பெருமைகள் எனக்குத் தேவையில்லை. உண்மையை நாடி அதனை அறிய வேண்டுமென்பதே எனது விருப்பம்.

— சாக்ரடீஸ்

ஈழநாடு
EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49. Jaffna Telegrams EELA NADU Jaffna Phone 389

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு பங்குனி மீ 21 உ (3-4-62)

## விபத்துக்களைத் தவிர்க்க வழி

விபத்துக்களுக்குப் பலியாவோரின் தொகை நாளாந்தம் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. இவ்விபத்துக்களை இயன்றவரை குறைப்பதற்கென பணியாற்றிவரும் இலங்கை விபத்துக்கள் தடுப்புச் சங்கத்தின் கருத்தரங்கம் சென்ற வாரம் கொழும்பில் நடைபெற்றபோது விபத்துக்களைக் குறைப்பதற்கான வழி வகைகள் ஆராயப்பட்டன.

மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொண்டால் எத்தனையோ விபத்துக்களை நேரகாலத்துடன் தடை செய்து கொள்ளலாம்.

இன்று வீதிகளில் ஏற்படும் பெரும்பாலான விபத்துக்களுக்கு வீதிகளிற் போவோர் வருவோரின் கவலையீனமும் ஒரு காரணமாகும். கார் ஓட்டுவோரின் கவனக்குறைவும் மிதமிஞ்சிய வேகமும் அலட்சிய மனப்பான்மையும் விபத்துக்கள் உண்டாவதற்கு ஏதுவாகின்றன. பாதைகளின் சீர்கேடும் அவற்றின் பழுதடைந்த நிலையும் விபத்துக்கள் உண்டாவதற்குத் துணைபுரிந்து வருகின்றன என்பதும் உண்மையே.

கார், பஸ் விபத்துக்கள் ஒருபுறமிருக்கத் தென்னிலங்கையில் போத்தல் விளக்குகளுக்கு சிறுவர் சிறுமியர் உட்பட வளர்ந்தவர்களும் பலியாகிவருகின்றனர். இதனைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் பாதுகாப்புடன் கூடிய போத்தல் விளக்குகளைச் செய்வதற்குப் பலசந்தர்ப்பங்களில் முயன்று வந்தது. இலங்கையிலுள்ள எண்ணெய்க் கம்பனி ஒன்றும் இத்துறையில் உழைத்துச் சாதாரண மக்களும் எளிதில் பெறக்கூடிய போத்தல் விளக்குகளைத் தயார் செய்வதற்கான வாய்ப்புக்களை அளித்தது அப்படியிருந்தும் போத்தல் விளக்குகளால் இன்றுந்தான் ஆபத்து ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது.

மின்சார சக்தியும் பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகளும் சுற்றிவரச் சுவர் எழுப்பபெருத கிணறுகளும் எத்தனையோ பேரின் உயிர்களுக்கு யமனாகிவிடுகின்றன. சிலமாதங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் ஒருவர் மின்சாரத்துக்குப் பலியானார். போதிய பயிற்சி பெருத ஒரு சிலர் இத்துறையில் பணியாற்றுவதால் அவ்விபத்து ஏற்பட்டதெனத் தெரிய வந்தது. கல்லூரிகளும் சனசமூக நிலையங்களும் மக்களுக்கு இத்துறையில் பிரசாரம் செய்து அவர்களுக்கு ஆர்வத்தை உண்டாக்குவார்களாயின் அனைவரின் ஒத்துழைப்புடன் இத்தகைய விபத்துக்களைத் தீர்த்துக் கொள்வது சாத்தியமாகும்.

---

## கிராம சேவகர்

திட்டங்கள் பல உருவாகலாம், மறையலாம். ஆனல் விதானைமார் முறை என்றுமே தொடர்ந்து நடைபெறுமென இலங்கை கவர்னர் ஒருவர் பல ஆண்டுகளுக்கு முன்னர் கூறியிருந்தார். அப்போது இலங்கையில் பிரிட்டிஷ் ஆட்சி நிலவியது. இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்த பின்னர் நிர்வாக முறைகளில் எத்தனையோ பல மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. அதே போன்று பழைய விதானைமாருக்குப் பதிலாக கிராம சேவகர்களை நியமனம் செய்வதென அரசாங்கம் முடிவு செய்து, அதற்கான பரீட்சையையும் நடாத்திற்று. ஆனல் இதுவரை கிராம சேவகர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை. பரீட்சையும் நடைபெற்று எத்தனையோ மாதங்களாகிவிட்டன. இதனல் நாட்டில் பல்வேறு வதந்திகள் பரவிவருகின்றன. கிராம சேவகர்களை நியமிக்கும் விஷயத்தில் அரசியல் தலையீடு குறுக்கிடுகிறதென்ற வதந்தி ஒன்று. இவ்வளவு காலமும் இருந்து வந்ததுபோலவே விதானைமார் முறையே தொடர்ந்து இருந்து வருமென்பது மற்ருெரு வதந்தி.

கிராம சேவகர்களை நியமிக்கும் விஷயத்தில் அரசாங்கம் மிகுந்த கவனம் செலுத்தவேண்டியிருப்பதால் காலதாமதம் ஏற்படுவது இயல்பே. பழைய விதானைமார்களின் அனுபவம் கிராம சேவகர்களுக்கு இருக்குமென நாம் எதிர்பார்க்க முடியாது. எனவே, அரசினர், கிராம சேவகர்களை நியமிப்பதாயின் அவர்களுக்குக் கிராமப் பொருளாதார அபிவிருத்தியில் நல்ல பயிற்சி அளிக்க வேண்டியது அவசியமாகும்.

# ஆடம்பர வாழ்க்கை இரத்த அழுத்த நோய்க்குக் காரணம்

நாகரிக வாழ்க்கையில் உள்ள அவசரமும் ஆடம்பரமும் கைத்தொழில், கலை அதிகமாகப் பரவிவருவதும், கிராம வாழ்க்கையிலிருந்து பட்டண வாழ்க்கைக்கு மாறுவதும், மோட்டார்கார்களை ஓட்டுவதினல் ஏற்படும் திடீர் அதிர்ச்சிகளும், ரத்த அழுத்தம் ஏற்படுவதற்கான பல காரணங்கள் என்பதை ஜெர்மன் நிபுணர் டாக்டர் மெட் ஜெர்ஹார்ட் வென்ஸ்மர் என்பவர் கண்டு பிடித்திருக்கிறுர்.

மிக அதிகமான ரத்த அழுத்தம் கொடிய நோய்களில் ஒன்று. இறப்பவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் இந்நோயால் பீடிக்கப்பட்டவர்களே. இந்த நோய் ஏற்படுவதற்கான முக்கிய காரணம் ரத்தக்குழாய்களில் அடைப்பு ஏற்பட்டு ரத்த ஓட்டம் சரிவர நடைபெருது இருத்தலே என்று முன்பெல்லாம் கருதப்பட்டு வந்தது. ஆனல் இப்போது அதற்கு வேறு பல காரணங்களும் உண்டு என்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

ரத்த ஓட்டம் சரியான அளவில் இல்லாததால் ஒரு பக்கம் அதிக அழுத்தம் ஏற்படுவது ஒரு காரணம். இருதயம் மூத்திரக்காய்கள் இவைகளில் நோய் ஏற்படுவது காரணமாகவும் ரத்த அழுத்தம் ஏற்படுவதுண்டு. ஹார்மோன் உற்பத்தி செய்யும் சில உறுப்புகள் மிக அதிகமாக வேலை செய்வதாலும் இந்நோய் ஏற்படலாம்.

### சிகரட் புகைத்தல்

சிகரட் அதிகமாகப் புகைப்பவர்கள் இந்நோய்க்கு இலக்காகிறுர்கள். சிகரட்டிலுள்ள "நிகோடைன்" என்கிற பொருள் ரத்தக்குழாய்களை சிறுகவைக்கும் சக்தியைப் பெற்றுள்ளது. இதுவரை நடைபெற்றுள்ள ஆராய்ச்சிகளிலிருந்து இந்த நோய் ஏற்பட்ட ஆரம்ப கட்டங்களில் ரத்தக்குழாய்கள் பாதிக்கப்படுவது தெரியாமலேயே இருக்கிறது என்று கூறப்படுகிறது.

ஏராளமான பேர்களுக்கு ரத்த அழுத்த நோய் ஏற்படவே தீவிரமாக ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன. வாழ்க்கையை நடத்தும் முறை, சில அதிர்ச்சிகள், சூழ்நிலை இவை எல்லாம்கூடக் காரணங்களாய இருக்கின்றன என்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

எடுத்ததெற்கெல்லாம் கோபித்துக் கொள்வது மூலம் ஏற்படும் நரம்புத் தளர்ச்சி காரணமாகவும் ரத்த அழுத்தம் ஏற்படுகிறதாம். மோட்டார் வண்டியை ஓட்டும்போது ஏற்படக் கூடிய சில அதிர்ச்சிகளாலும் இந்நோய் ஏற்படுவது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. வீட்டில் ஓய்வு எடுத்துக் கொள்ளும், ரத்த ஓட்டம் சாதாரணமாக இருந்தவர்களுக்கு மோட்டார் ஓட்டி வந்த பின்பு "அழுத்தம்" ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆனல் சிலர் இம்மாதிரி உணர்ச்சி அதிர்ச்சிகளைக்கூட நன்கு சமாளிக்கின்றனர்.

### நிபுணரின் நூல்

"ரத்த அழுத்தமும் நாகரிக வாழ்க்கையும்" என்பது குறித்து ஓர் அருமையான புத்தகத்தை மேற்கு ஜெர்மன் வைத்திய நிபுணர், டாக்டர் மெட் ஜெர்ஹார்ட்வென்ஸ்மர் வெளியிட்டிருக்கிறுர். இவர் விரிவான ஆராய்ச்சிகளை நடத்தி அதில் தாம் கண்டு பிடித்த முடிவுகளைப் புள்ளி விவர ஆகாரங்களுடன் வெளியிட்டிருக்கிறுர். ரத்த அழுத்தம் நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது என்றும் இவர் கூறுகிறுர். வட அமெரிக்காவில் வசிக்கும் ஒருவர் உணர்ச்சிக் கொந்தளிப்பை மிகச் சாதாரணமான நிலையில் சமாளிக்கிறுர். இவருக்கு ரத்த அழுத்தம் குறைவான நிலையிலேயே இருக்கிறது. ஆனல் ஐரோப்பி நாடுகளில் வசிப்பவர்கள் அம்மாதிரி இல்லை என்று இவர் விளக்கிக்காட்டுகிறுர்.

நாகரிக வாழ்க்கை, கைத்தொழில் அபிவிருத்தி இவை மக்களிடையே ஏற்படும் ரத்த அழுத்த நிலைக்கு எவ்வளவு காரணமாக இருக்கின்றன என்பதையும் இவர் ஆராய்ந்திருக்கிறுர். மன அதிர்ச்சி இந் நோய்க்கு முக்கியமான காரணங்களில் ஒன்று என்பது இவர் முடிவு. சமீபகாலங்களில் பல நாட்டினர்களிடம் இதுசம்பந்தமான பரீட்சைகள் செய்யப்பட்டன.

இந்தியர், சீனர், ஆபிரிக்கர், பிலிப்பானியர், அமெரிக்க இந்தியர்கள் ஆகியோர்களிடம் நடத்திய ஆராய்ச்சிகளிலிருந்து இவர்களுக்குக் குறைந்த ரத்த அழுத்தம் இருபபது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

தலைமுறை தலைமுறையாக நோய் தொடர்ந்து வருவது என்ற உண்மையைவிட சந்தர்ப்ப சூழ்நிலைக் காரணங்களால் எற்படும் மனஅதிர்ச்சிகள் ரத்த அழுத்தநோய் ஏற்படுவதற்கான முக்கிய காரணமாயிருக்கிறதென்பதைவென்ஸ்மர் கண்டுபிடித்திருக்கிறுர்.

அமைதியான சூழ்நிலையுள்ள கிராமங்களில வசிப்பவர்கள், நகரங்களில் குடியேறி வசிக்கச் செய்யப்பட்டு பின்னர் பரீட்சிக்கப்பட்டனர். இவர்கள் ரத்த அழுத்தம் மிகவும் அதிகரித்துள்ள தென்பது கண்டு பிடிக்கப்பட்டது. இவருடைய திடமான முடிவு, நாகரிக வாழ்க்கையால் ரத்த அழுத்த நோய் எற்படுகிறது என்பதே. இதுசம்பந்தமான ஆராய்ச்சிகள் இன்னும் மேற்கொண்டு நடைபெறவிருக்கின்றன.

---

# வாதநோய் தடுப்பு மருந்து பெற அரிசிப்பங்கீட்டுப் புத்தகம் தேவை

கொழும்பு, திங்கள்

இளம்பிள்ளை வாதநோய் தடுப்பு மருந்து பெற விரும்பும் கொழும்புவாசிகள் தமது அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்களையும் தம்முடன் எடுத்துச்செல்ல வேண்டும் என்று கேட்கப் பட்டுள்ளனர்.

நகரசபை எல்லைக்குள் இல்லாத அயலூர்மக்களும் நகர சபையின் நோய்தடுப்பு நிலையங்களுக்குச் சென்று வாத நோய் தடுப்பு மருந்து பெற்றுக் கொள்ளாது பார்த்துக்கொள்வதற்கே பிரதான வைத்திய அதிகாரி டாக்டர் வி. நடராஜா மேற்படி நியதியைப் பிறப்பித்துள்ளார்.

கடந்த வாரம் கொழும்பு நகர சபையின் வாத நோய் தடுப்பு நிலையங்களில் அயலூர் பிள்ளைகள் பலர் சென்று தடுப்பு மருந்து பெற்றுக் கொண்டனர். பிலியந்தலை, மொரட்டுவை, இரத்மலானை, பொரலஸ் கமுவ ஆகிய இடங்களிலிருந்து தனிப்பட்ட வான்கள் பல, பிள்ளைகளை நகர சபை நிலையங்களுக்கு எடுத்துச் சென்றன.

புதிய நியதியின்படிநகரசபை எல்லைக்குள் இருப்பவர்கள் மட்டுமே தமது அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்களைக் காண்பித்து தடுப்பு மருந்தை இனிமேல் பெற்றுக்கொள்ளலாம்.

## புகையிலை ஏற்றுமதி
### உணவு மந்திரி தகவல்

ஹெவஹெட்டா, ஞாயிறு

"எங்கள் நாட்டின் சிறந்த புகையிலையை செக்கோஸ்லவாக்கியாவுக்கு ஏற்றுமதி செய்ய எதிர் பார்க்கிறேன்" என்று உணவு,வர்த்தக அமைச்சர் திரு. டி. பி. இலங்கரத்ன இங்கு நடைபெற்ற ஒரு வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மிளகு, கறுவா, மற்றும் விளை பொருள்களையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத் திட்டமிட்டுள்ளோம் என்று திரு. இலங்கரத்ன கூறினர்.

---

## ரயில் முன் விழுந்து மரணம்

மீரிகம, திங்கள்

மீரிகமாவிலுள்ள தெங்குப் பொருள் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றில் வேலை பார்த்து வந்த பி. வி சிறிசேன என்னும் 19 வயது இளைஞன், ஓடிக்கொண்டிருந்த ரயில் வண்டியின் முன்னர் பாய்ந்து கொண்டு மரணமானர்.

கரோலிஸ் என்னும் தன்னுடைய நண்பர் ஒருவரைக் கோடரியால் வெட்டிவிட்டு சிறிசேன ஓடும் ரயில் முன் விழுந்து தற்கொலை செய்து கொண்டார் எனக் கூறப்படுகிறது. கரோலிஸ் ஆஸபத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டாராம்.

## ஐயாறன் எழுதுவது

பெரிய குற்றம் செதுவிட்டேன். உங்களிடம் 'லீவு' வாங்காமல் மீண்டும் சென்றுவிட்டதால், எப்படிமன்னிப்புக் கேட்பது என்று தயங்கிக் கொண்டே ஆபீசுக்கு வந்தேன். மேசையிலே பல கடிதங்கள் காத்திருந்தன. பருத்தித்துறையிலிருந்து ஓர் அன்பர் எழுதியிருப்பதாவது:-

அன்பர் ஐயாறன் அவர்கள் முன்பு பாரதக் குடியரசு தினக்கொண்டாட்டத்துக்காக பல நாட்கள் லீவு எடுத்துக்கொண்டார்.

இப்போது முன் அறிவித்தல் கொடுக்காமலே பல நாட்கள் லீவு எடுத்திருக்கிறுர். மன்னிக்கவே முடியாது. எங்காவது வலையில் சிக்கிக் கொண்டாரா? நம்ப முடியவில்லை. விரைவில் தயவு செய்து ஆஜர் படுத்துங்கள்". இவ்வாறு அவர், எடிட்டருக்குக்கடிதமெழுதியுள்ளார். மாவிட்டபுரத்திலிருந்து ஓர்அன்பர், 'ஐயாறன் எங்கே'? என்று நேரிலேயே ஆபீஸ் வந்து கவலையுடன் விசாரித்தாராம். வேறு பலரும் கேட்டதாக அறிந்தேன்.

இந்த அன்புப் புகார்களைக் கேட்க ஒருபுறம் மகிழ்ச்சி. மற்ருேர் பக்கம் குற்றம்செய்துவிட்ட குறு குறுப்பு. என் உண்மையான எஜமானர்கள் "மன்னிக்கவே முடியாது" என்று கூறியபின் மன்னிப்புக் கேட்பதில் பயனென்ன? ஆஜராகிவிட்டேன். எந்தவித தண்டனை கொடுத்தாலும் ஏற்கத்தயார். வேறென்ன சொல்லுவது?

* * *

ஒருநாள்கூட லீவே எடுக்கக் கூடாதென்பதுதான் என் விருப்பமும். ஆனல் மீண்டும் எதிர்பாராதபடி, இந்தியாவுக்குச் செல்ல நேரிட்டது. கை கட்டு, கால்கட்டு ஏற்பட்டபின், நம் இஷ்டப்படி சுதந்திரமாக இருக்கமுடிகிறதா?

7 வருடங்களுக்கு ஒரு முறைதான் இந்தியாவுக்குச் செல்லலாமென்று இலங்கை அரசாங்கம் உத்தரவு போட்டிருக்கிறதாம்! இந்திய பிரயாணத்துக்கு புதுப் புதுத் தடைகள் போடப் போட, அடிக்கடி இந்தியா செல்ல நேரிடுகிறது! விமானத்தில் செல்லக் கூடாதென்ருல் ரயில். செலாவணி கிடையாதென்ருல், நண்பர்கள் உதவுகிறுர்கள். தெய்வம் நினைத்தால், இந்த மனிதச் சட்டத் தடைகள் எம்மாத்திரம்!

* * *

பிரயாணத்துக்கான புதிய தடைகளைப்பற்றி இந்தியாவில் ஓர் அன்பர் மிகவும் கவலை தெரிவித்தார். இங்கு வந்து விசாரித்ததில், இப்போதைய பாஸ்போர்ட் செல்லுபடியாகும்வரை, ரயிலில் சென்னை வரை ரிட்டர்ன் டிக்கெட் பெற்றுச் செல்லலாம். எந்தக் காரணத்துக்கும், பாஸ்போர்ட்டை குடியேற்ற கந்தோரில் கொடுக்க நேரிட்டால், அதில் உடனே சீல் அடித்துவிடுகிறுர்களாம், ஒரே ஒரு பிரயாணத்துக்குத்தான் செல்லும் என்று. பிரயாணம் முடிந்ததும் அதை எடுத்துக்கொண்டுவிடுவதாயும், ஒரு வருஷத்துக்கு ஒரு முறை, அவசிய காரணம் காட்டினல் புதிய பாஸ்போர்ட் பெற்று செல்லலாமென்றும், ஆனல் செலாவணி கொடுக்கப்படமாட்டாதென்றும் தெரிய வந்தது.

இன்னும் ஏழு வருடங்களுக்கு, கந்தோரைவிட்டு அசையக்கூடாதென்று ஓர் அன்புக் கட்டளை பிறந்தது. என் விருப்பமும் அதுவே. ஆனல் நம் கையில் என்ன உள்ளது? எல்லாம் "எனையாளும் ஈசன் செயல்" அல்லவா?

ஆனல் ஒன்று. இனி இப்படி எங்காவது செல்வதாயின் உங்களிடம் முன் கூட்டியே அறி

(5ம் பக்கம் பார்க்க)

# பல்லேகல தோட்டத்தை அரசாங்கம் எடுக்குமா?

## ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க கமிட்டி நியமனம்

கொழும்பு, திங்கள்

பல்லேகலை தோட்டத்தின் எதிர்காலம் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு விசேஷ கமிட்டியொன்றை காணி அபிவிருத்தி மந்திரி திரு. சி. பி. டி' சில்வா நியமித்துள்ளார்.

கண்டி அரசாங்க அதிபர் திரு. வி ஜே. சேரசிங்கா, விவசாய இலாகா டைரக்டர் திரு. ஏ. வி. ரிச்சர்ட்ஸ், காணிக் கமிஷனர் திரு. எச். வி. குணவர்த்தன, தேசிய வீடமைப்புக் கமிஷனர் திரு. கே. எம். டி. ஜயனெட்டி, ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனர் திரு டபிள்யு. டி. வி. மகாதந்தில, மக்கள் வங்கி ஜெனரல் மனேஜர் திரு. டபிள்யு. எச். சொலமன்ஸ், கூட்டுறவு அபிவிருத்திக் கமிஷனர் திரு. திலக்குணரத்ன, கண்டிய விவசாயக்கமிஷன் இணைப்பு அதிகாரி திரு எல். பி. மடுறுவ ஆகியோர் இக்கமிட்டியில் அங்கம் வகிக்கின்றனர்.

பல்லேகல தோட்டத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டுமா? அப்படியானல் அதை லாபகரமாக நடத்துவதற்கு என்ன செய்ய வேண்டும்? அரசாங்கம் எடுத்துக்கொள்ளாவிட்டால் பல்லேகல தோட்டம் சம்பந்தமாக என்ன விதமான கொள்கையை அனுஷ்டிக்க வேண்டும்? இது தான் கமிட்டி ஆராயவேண்டிய வேலை.

கமிட்டியின அறிக்கை கிடைத்ததும் கமிட்டியின் சிபார்சுக்கிணங்க அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மந்திரி சி. பி. டி' சில்வா தெரிவித்தார்.

## சங்கீத ஆசிரியர்களுக்கு திரும்பவும் இடமாற்றம்

கொழும்பு, திங்கள்

சங்கீத ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கிய உதவி வித்தியாதிபதிகள் சிலர், ஒரு முக்கிய நியதியின்படி ஒழுகத் தவறியுள்ளதாக வித்தியாதிபதி திரு. எஸ். எப். டி. சில்வா, அவர்கள்மீது குறை கூறியுள்ளார்.

பிரதம சங்கீத வித்தியாதரிசியுடன் கலந்தாலோசித்த பின்னரே சங்கீத ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்குமாறு வித்தியாதிபதி, உதவி வித்தியாதிபதிகளைக் கேட்டிருந்தார். சில உதவி வித்தியாதிபதிகள் அவ்வாறு செய்யத் தவறியுள்ளனர்.

பிரதம சங்கீத வித்தியாதரிசியுடன் கலந்தாலோசனை செய்யப்படாது இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ள சங்கீத ஆசிரியர்களை சங்கீத வித்தியாதரிசியால் நியமிக்கப்பட்டிருந்த ஸ்தலங்களுக்கே திரும்பவும் அனுப்பிவைக்குமாறு வித்தியாதிபதி உதவி வித்தியாதிபதிகளுக்குப் பணிந்துள்ளார்.

## 'விவசாய விருத்தியில் பெண்களும் ஆர்வம் எடுக்க வேண்டும்' —பிங்கிரியா எம். பி.

வென்னப்புவ, திங்கள்

"இலங்கை ஒரு விவசாய நாடாக இருந்த போதிலும் விவசாயம் இங்கு விருத்தியடைந்தில்லை. இக்காலத்து யந்திரசாதன முறைகளை விவசாயத்தில் மக்கள் புகுத்திக் கொள்ளாமையே இதற்குக் காரணமாகும்".

இவ்வாறு பிங்கிரியா எம். பி. திரு. எல். பி. ஜயசேன உடுபடவா ராஜய மகா வித்யாலயத்தில் நடைபெற்ற கூட்மொன்றில் பேசுகையில் கூறினர்.

கட்டுகம்போலைக்கொறளைக்கு அபிவிருத்தித் திட்டம் ஒன்றை ஆரம்பித் துவைக்குமுகமாக இந்தக்கூட்டம் கூடப்பட்டது.

தேவையான உணவுப் பொருள்களை இங்கு அபிவிருத்தி செய்வதற்கு ஆண்கள் மாத்திரமன்றி பெண்களும் உழைக்கவேண்டும் என்று திரு ஜயசேன கூறினர்.

"பெண்கள் அடுக்களைகளில் குந்தியிருந்து சமைத்தகாலம் போய்விட்டது. அவர்களும் ஆண்களுடன் சரிசமமாக வேலை செய்யவேண்டும்" என்று அவர் கூறினர்.

# 'மறுமலர்ச்சிக்கு வித்திட்ட ஆசிரியர் பொன்னையா'

## ஞாபகார்த்த விழாவில் பாராட்டு

தெல்லிப்பழை, திங்கள்

ஈழத்தின் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு ஈழகேசரி பொன்னையா வித்திட்டார். அவர் விதைத்த விதை இன்று மரமாகிப்பழக்கனிகளைத் தரும் நிலையில் உள்ளது. தமிழ் என்றால் அலட்சிய மனப்பான்மை நிலவிய காலத்தில் மிகுந்த உள்ளத்துணிவுடன் அரசியலிலும் இலக்கியத்திலும் தமது வாழ்க்கையை அர்ப்பணித்து ஈழநாட்டு மறுமலர்ச்சிக்கு முன்னேடியாக 'விளங்கினர் என்று கூறின் அது மிகையாகாது."

இவ்வாறு திரு. கனக. செந்திநாதன் குரும்பசிட்டி சன்மார்க்கசபை மண்டபத்தில் நடைபெற்ற திரு. பொன்னையா ஞாபகார்த்தத்தின் விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"நமக்கெல்லாம் நாட்டுப் பற்றினை ஊட்டி வளர்த்தார், திரு. பொன்னையா. அவரது தீவிர முயற்சியின் பெறுபேறு தான் இலங்கையில் பாட புத்தகம் எழுதும் ஆர்வம் பெருகியதற்கு காரணமாகும்." திரு. பொன்னையா நமது நாட்டு விஷயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து நூல்களை சேற்றினர்.

திரு.பொன்னையா ஒவ்வொரு துறையிலும் ஆற்றல் படைத்தவர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்கு ஊக்கமளித்தார். மகாத்மாகாந்திஜி அவர்கள் இந்தியாவில் மாகாணரீதியாக எவ்வாறு தலைவர்களைப் பொறுக்கியெடுக்கும் ஆற்றல் பெற்று விளங்கினரோ அதே போன்று ஈழத்தில் ஒவ்வொரு துறையிலும் ஆற்றல் படைத்தவர்களைக் கண்டார். தமிழே மூச்சாகக் கொண்டு ஒவ்வொரு துறையிலும் வல்லுனராக விளங்கிய பெருமையை திரு. பொன்னையா பெற்றுவிட்டார்."

திரு. கு.அம்பலவாணபிள்ளை பேசுகையிற் கூறியதாவது:-

"இலங்கையில் அறிவு வளர்ச்சிக்குத் தேவையான நூல்களையெல்லாம் அச்சுவாகனமேற்றிய திரு. பொன்னையா மகா வித்துவான் கணேசையரின் தொண்டுகள் எங்கும்பரவ உதவியவர். தமிழுக்கு வேண்டிய நூல்களையெல்லாம் 'ஐயா' அவர்கள் எழுதக்காரணம் அவரே. அவர் எக்கருமத்தைச் செய்ய ஈடுபட்டாலும் அக்கருமத்தைச் செய்யப் பின்னிற்காதவர். இலங்கை மாதாவின் புகழுக்குத் தொண்டுசெய்த திரு. பொன்னையா நிறுவிய ஸ்தாபனங்கள் அடைந்துள்ள நன்னிலையே அவர் தொண்டுகளுக்கு எடுத்துக்காட்டாகும். இந்தியாவில் படித்தவர்கள் விரும்பிப்படிக்கும் இலங்கைப் பத்திரிகை மூலம் 25 ஆண்டுகளுக்குமேலாக மொழி, அரசியல்,சமயம் ஆகிய துறைகளை வளம்படுத்தினர். அவரைப் போற்றுதல் நம் தமிழ் மக்கள் கடன்"

திரு. ஏ. டி. பொன்னுத்துரை பேசுகையிற் குறிப்பிட்டதாவது:-

'இன்று இலக்கிய ரசிகர்கள் குழாம் அதிகரிக்கக் காரணகாத்தாவாக திரு.பொன்னையா இருந்திருக்கிறர். பத்திரிகை வாங்கிப்படிக்க ஆட்களே இல்லாத சமயத்தில் தொடர்ந்து பல கஷ்டங்களுக்கிடையே பத்திரிகையை நடத்திப் புகழ் பெற்றர்.'

சன்மார்க்க சபைக் காரியதரிசி திரு. த. இராசரத்தினம் நன்றி கூறினர்.

## பெருந்தொகையில் பால் நிலையங்கள்

மத்துகம, திங்கள்

"தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் இலவச பால் வழங்கும் பால் நிலையங்களைக் கூட்டுறவு இயக்க மூலமாகப் பெருந்தொகையில் நிறுவுவதே அரசாங்கத்தின் நோக்கமாகும். இந்தப் பால் நிலையங்கள் மக்களுக்குப் பெரிதும் உதவி செய்யும்."

இவ்வாறு காணி, விவசாய அமைச்சர் திரு. சி.பி. டி'சில்வா மேற்கு பஸ்துன் கோறளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினல் மத்துகமவில் நிறுவப்பட்ட பால் நிலையமொன்றைத்திறந்து வைத்துப் பேசுகையில் கூறினர்.

உதவி ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. டயா டி பஸ்காரின் கோரிக்கைகள் யாவற்றையும் தாம் நிறை வேற்ற விருப்பதாகக் காணி அமைச்சர் மேலும் கூறினர்.

## பாரத விமானப்படை ஆண்டு விழா

ஹைதராபாத் ஏப்ரல் 2

பாரத விமானப்படையின் 29 வது ஆண்டு விழா இன்று கொண்டாடப் பட்டது. படை வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை பாது காப்புமந்திரி திரு. கிருஷ்ண மேனன் ஏற்றுர். ஒரு சில விமானங்களைக் கொண்டிருந்த பாரத விமானப்படை கடந்த 14 ஆண்டுகளில் வெகுவாக வளர்ச்சி பெற்று, ஆசியாவிலேயே பெரிதாக வளர்ந்துள்ளது என கிருஷ்ண்மேனன் கூறினர். இந்திய விமானப்படை வலுத்தாக்குதல் நடத்துவதற்காக வன்றி எல்லைகளைப் பாதுகாக்கவே இருக்கிறதென அவர் கூறினர். நாகாலாந்து போன்ற இடங்களில் பொதுமக்களுக்கு உதவிக்காகவும் விமானப்படை கருமமாற்றுகிறது என்றுர் மேனன்.

## 244 பேர் பலி

கொழும்பு, திங்கள்

இவ் வருடம் முதல் மூன்று மாத காலத்தில் விபத்தினலும் பலாத்கார சம்பவங்களினலும் 244 பேர் பலியானர்கள்.

# அரசாங்க சேவை சீரமைப்புத் திட்டம்

## ஒருமாதத்தில் தயாராகும்

கொழும்பு, திங்கள்

வில்மட் பெரேரா சம்பளக் கமிஷனின் சிபார்சுக்கிணங்க அரசாங்கசேவையைச் சீர்திருத்தி அமைக்கும் திட்டத்தை நிதிமந்திரி திரு. பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயக்கா தயாரித்துவருகிறர்.

இத் திட்டம் ஒருமாதத்துக்குள் தயாராகிவிடுமென எதிர் பார்க்கப்படுகிறது. நிதிமந்திரி நியமித்த பல உத்தியோகபூர்வமான கமிட்டிகள் இத் திட்டத்தைத் தயாரிப்பதில் நிதி மந்திரிக்கு உதவிபுரிகின்றன.

அரசாங்கசேவை சீரமைப்பில் சிவில்சேவை ஒழிக்கப்பட்டுவிடுமென்றும் இணைக்கப்பட்ட நிர்வாக சேவை என புதியதொரு சேவை உருவாக்கப்படுமென்றும் இச் சேவையில் சம்பள வித்தியாசமிருக்காதென்றும் கூறப்படுகிறது.

அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்றதும் புதிய திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்படும்.

## வானெலி நிருவாகர் பதவிக்கு சிவில் சேவையாளர்?

கொழும்பு, திங்கள்

இலங்கை வானெலி உத்தியோக அமைப்புமுறையில் மாற்றங்கள் ஏற்படுத்துவதா, இல்லையா, என்பதுபற்றி பதில் கல்வி மந்திரி திரு. வி. டி. ஜி. கருணரத்ன நாளை தீர்மானம்செய்வார்.

இலங்கை வானெலி தேசிய ஒலிப்பரப்புக்கு சிவில் சேவையாளர் ஒருவரை டைரக்டராக நியமிப்பது பற்றி கல்வி, வானெலி அமைச்சு ஆலோசனை செய்துவருகிறது. இந்த சேவைக்கு பதில் டைரக்டராக்கடமையாற்றிய டி. டி. எல். குருகே என்பவரை நிரந்தரக் காரியதரிசி திரு. எச். ஜினதாசா சென்ற சனிக்கிழமையன்று வேலையிலிருந்து விலகும்படி செய்தார்.

## பங்கீட்டுப் புத்தகம் வழங்கப்படவில்லை

நாவலப்பிட்டி, திங்கள்

உடபுலத்கம டி. ஆர். ஓ. பகுதியிலுள்ள ஆயிரக்கணக்கான மக்கள் தமது புதிய அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்களை இன்னும் பெற்றுக் கொள்ளவில்லையாம். புதிய பங்கீட்டுப் புத்தகங்கள் 3 வாரங்களுக்கு முன்னரே ஏனையோருக்கு வழங்கப்பட்டது.

பள்ளிக்கூட விடுதிகளில் உள்ள மாணவர்களே இதனல் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

19 தடவைகளாக பங்கீட்டுப் புத்தகங்கள் பெற்றுவந்துள்ள சிலருக்கும் புத்தகங்கள் இம்முறை மறுக்கப்பட்டுள்ளனவாம்.

## ஆசிரியைக்கு பிரிவுபசாரம்

காரைநகர், திங்கள்

தமிழ்க்கலவன் பாடசாலையில் ஆசிரியை யாகப்பணியாற்றிய செல்வி நா. இராசதுரைக்கு ஓர் பிரிவுபசாரக் கூட்டம் பாடசாலைமண்டபத்தில் தலைமை ஆசிரியர் திரு. க. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. ஆசிரியர்கள் பலர் அதரது சேவை நலனைப் பாராட்டிப் பேசினர்.

## திருக்கேதீச்சர ஆலயம்

### அலங்காரோத்சவ விழா

திருக்கேதீச்சரம், திங்கள்

திருக்கேதீச்சர ஆலயத்தில் புதன் கிழமை அலங்காரோத்சவம் ஆரம்பமாகின்றது. அன்று திருக்கோணமலைச் சைவ அடியார்கள் கோணேசப் பெருமானின் பாவநாசதீர்த்தத்தைத் திருக்கேதீச்சரம் கொண்டுவந்து அபிஷேகம செய்வார்கள். அடுத்தநாள் விழாவை மட்டக்களப்பு சைவ அடியார்கள் பொறுப்பேற்று நடாத்துவார்கள்.

## மின்னல்தாக்குதலினல் காயமுற்றனர்

நாரமல, திங்கள்

மெத்தியாங்கணையிலுள்ள வீடு ஒன்று மின்னல் தாக்குதலுக்குள்ளாகியதால் 6 பேர் படுகாயமடைந்துள்ளனர். இந்த ஆறுபேரும் கிரியுல்லா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

## ஐயாறன்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

வித்து 'லீவு' வாங்கிக்கொள்ளுகிறேன். வலையில் அகப்பட்டுவிட்டேனே என்று யாரும் அஞ்சத் தேவையில்லை. இறை அருள் பரிபூரணமாக இருப்பதால், அப்படி எதுவும் நேரிடாதென்பது உறுதி.

## அதிபர்கள் மகாநாட்டை நடத்த கென்னடி தயார்

லண்டன், ஏப்ரல் 2

மே மாதத்தில அதிபர்கள் மகாநாட்டைக் கூட்டுவதற்குத் துரிதமான ஏற்பாடுகளைச் செய்யுமாறு உத்தரவு பிறப்பிப்பதற்கு ஜனதிபதி கென்னடி தயாராக இருப்பதாக நம்பப்படுகிறது.

அதிபர்கள் மகாநாடு மே மாதத்தில் எப்போதாவது, ஜெனிவாவில் நடத்தப்படலாம்.

அடுத்தமாத இறுதியில் பிரிட்டிஷ் பிரதமர் ஸ்ரீ மாக்மில்லன், ஜனதிபதி கென்னடியைச் சந்திப்பார். இந்தச் சந்திப்புக்குப் பிறகு அதிபர்கள் மகாநாட்டைப் பற்றிய அறிக்கை வெளியிடப்படலாம்.

பெர்லின் பற்றி யு. எஸ். வெளிவிவகார மந்திரி ரஸ்கும் சோவியத் வெளிவிவகார மந்திரி குரோமிகோவும் வெறுப்பு உணர்ச்சி காட்டாமல் பேச்சுவார்த்தை நடத்தியது யு. எஸ். அரசாங்கத்துக்குத் திருப்தியளித்திருக்கிறது. பெர்லின் பிரச்சனை பற்றி சோவியத் ரஷ்யா யுத்தத்தை உண்டு பண்ணுது என்பது தெளிவாகிவிட்டது. கிழக்கு ஜெர்மனியுடன் ரஷ்யா அவசரப் பட்டுத் தனி சமாதான ஒப்பந்தமும் செய்து கொள்ளாது என்று தெரிகிறது.

## சென்னையில் சத்திய மூர்த்தி தினம்

சென்னை, ஏப்ரல் 2

காலஞ் சென்ற தலைவர் திரு. எஸ். சத்திய மூர்த்தியின் நினைவு தினம் நேற்று சென்னையில் கொண்டாடப்பட்டது. இது சம்பந்தமான வைபவத்திற்கு கேரள கவர்னர் திரு. வி. வி. கிரி தலைமை வகித்தார். திரு. சத்திய மூர்த்தியின் பார்லிமெண்ட் விவகாரத் திறமை, சட்ட ஞானம, ஆழ்ந்த அறிவு, தேசபக்தி ஆகியவற்றை திரு. கிரி, அப்போது புகழ்ந்துரைத்தார்.



# மாணவர் மலர்



## நண்பனின் கடிதம்: 2

பாலாவுக்கு!

உனது கடிதம் கிடைக்கப்பெற்றேன். கற்பனைக்கும் எட்டாத கருத்துக்களை வண்ணத் தமிழில் வடித்திருந்தாய். மகிழ்ச்சி, பாலு! கருத்து ஒருமித்த இரு உள்ளங்கள் ஒன்றை ஒன்று விரும்பும் உள்ள நெகிழ்ச்சி, அன்பாக அரும்பிப் பாசமாக மலர்கிறது. அதில் உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்று எவரும் ஆக்கப்படுவதில்லை சமூகம் அப்படி ஆக்கிவிடுகிறது. இந்தச் சமூகத்தில்தான் நீயும் நானும் வாழவேண்டியிருக்கிறது என்று நீ எண்ணலாம். உண்மைதான். உலகின் பெரிய உத்தமர்கள் என்று போற்றப்பட்டோர் பலரும் ஏழ்மையின் கோரக்கரங்களில் அகப்பட்டுச் சுடரும் பொன்போல் ஒளிவிட்டு மக்களால் போற்றப்பட்டவர்கள். மக்கள் தம் வாழ்விற்கு வழிகாட்டியவர்கள். அவர்கள் வாழ்வோடு நிழலாடி நின்றது ஏழ்மை தானே, நண்ப!

'நானோ ஏழை. நீ'... என்று ஏதோ முடித்தும் முடியாமலும் எழுதியிருந்தாய். பணம் மட்டும் இருந்துவிட்டால் ஒருவன் உயர்ந்தவனாகிவிட முடியுமா என்ன? அன்பு, பொறை, அடக்கம் என்பன வேண்டாமா? மனஉறுதியும் நிறை அறிவும் வேண்டாமா? இவையல்லவா நாம் தேட வேண்டிய செல்வம். இப்பண்புகள் கொண்ட இலட்சிய இளைஞர்கள்தான் இன்று வேண்டும். செல்லரித்த இச்சமூகத்தைச் சீர்திருத்த அவர்கள்தான் வேண்டும். ஓடும் ரயிலில் இருந்து கொண்டு அவசரம் அவசரமாக இக்கடிதத்தை எழுது முன் இறங்கும் தலம் வந்து விட்டது. உன் அன்பான கடிதம் கண்டு விரிவாக எழுதுகிறேன்.

அன்பு நண்பன்,
ராஜா.

[எழுதியவர்: வெள்ளவத்தை பரணி ஆறுமுகம்.]

∴ ∴ ∴

இக்கடிதத்துக்குரிய பதிலை எவரும் எழுதி அனுப்பலாம். நல்ல கருத்துள்ள கடிதம் இங்கு வெளியிடப்பெறும்.

## ஊரும் பேரும்

—எ. கதடி ஆ. கந்தையா—

எல்லாச் சிறப்பும் பெற்ற யாழ்ப்பாண் நகரின் வட கிழக்கே, கண்டோர் கண்களைக் கவரும் வண்ணம் கார்த்திகைப் பூக்களும் தீர்த்தக் கரையும், சுழனிகள் பலவும் சாலச் சிறந்து, கோலப் பொலிவோடு விளங்கிய கைதடியூரில் உள்ள தான்தோன்றி விரகத்திப் பிள்ளையார் ஆலயத்திற்காக, இப்போது இயத்தை என்று அழைக்கபபடும் இடத்தில் ஒரு கிணறு வெட்டப்பட்டது.

கிணற்றை வெட்டும் சமயம், பிள்ளையார் உருவம் ஒன்று பட்டது. அவ்வுருவத்தின் கையை தடியென நினைத்து வெட்டி விட்டனர். இதனுடு கைதறி' என்றழைக்கபபட்ல், இப்பொழுது இவ்வூர் கைதடி என்ற பெயருடன் வழங்குகின்றது.

விஞ்ஞானம்: 8

## ஒளியின் தந்தை எடிஸன்

— மகான் —

மின்சாரவிளக்கைக் கண்டுபிடித்து உலகுக் களித்தவர்களில், அமெரிக்க விஞ்ஞானியான தாமஸ் எடிஸன் முக்கியமானவர்: நாற்பது வருடங்களில் சுமார் 1,300 புதிய சாதனங்களைக் கண்டுபிடித்து உலகப்பிரசித்திபெற்ற எடிஸனது இளமைப் பருவம் ஏழ்மை நிறைந்ததாகவே இருந்தது. ஊக்கமும் விடாமுயற்சியுமே இவரை உன்னத நிலைக்குக்கொண்டுவந்தன.

1847-ம் ஆண்டு ஓஹியோ என்ற இடத்தில் எடிஸன் பிறந்தார். எளிய குடும்பத்தில் பிறந்த எடிஸன், சிறுவனாக இருந்தபொழுது ஒரு சிறிய கிராமப் பள்ளிக்கூடத்தில் கல்வி கற்றுவந்தார். ஒரு நாள், ஆசிரியர் இவரை அணுகி "நீ மந்தபுத்தியுள்ளவன்......... மூளை இல்லாதவன்........" என்று நிந்தித்தார். வெட்கமும் துக்கமும் அடைந்த எடிஸன், விரைவாக வீடுநோக்கி நடந்தவற்றை விபரமாகத் தனது தாயாரிடம் கூறினர். ஆத்திரம் கொண்ட தாயார், எடிஸனைப் பாடசாலைக்குச் செல்லவேண்டாமென்று கூறி, அவருக்குவேண்டியவற்றை அன்புடன் வீட்டிலேயே பயிற்றிவந்தார்.

எதிலும் நுணுக்கமாக ஆராயும் திறன்படைத்த எடிஸன், தனது நாளாந்த வாழ்க்கையில் ஒரு நிமிஷத்தையும் வீணுக் கழிக்கவில்லை. அவரது இளமைப் பருவம் 'எதையும் சாதிக்கவேண்டும், உலகப் புகழ் அடையவேண்டும்' என்ற உயர்ந்த நோக்கங்களையே ஒவ்வொருநாளும் தெரிவித்துக் கொண்டிருந்தது. அச்சமயத்தில் எடிஸனது ஊக்கத்துக்கு இடையூருக, விதியும் விளையாட ஆரம்பித்து விட்டது. பத்துவயதாக இருக்கும் பொழுதே, குடும்பத்தைக் காப்பாற்றும் பொறுப்பும் எடிஸனைச் சூழ்ந்துவிட்டது. ரயில்வே நிலையங்களிலும், ரயில்வண்டிகளிலும் பத்திரிகை விற்கும் தொழிலை மேற்கொண்டு குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காகப் பணம் சம்பாதித்தார். ஓய்வு நேரங்களில் பத்திரிகைகளைப் படித்துப் பல விஷயங்களையும் புரிந்துகொண்டார்.

பத்திரிகைகளைப் படிப்பதில் ஊக்கம்செலுத்திய எடிஸனுக்கு, பத்திரிகையொன்றை ஆரம்பிக்கவேண்டும் என்ற ஆர்வம் பிறந்தது. இதன் முடிவு? ரயில்வண்டி அறை ஒன்றில் அச்சு இயந்திரத்தை அமைத்துக்கொண்டு பத்திரிகையொன்றை வெளியிடத் தொடங்கினர். ஒருநாள் அச்சுஇயந்திரம் வைத்திருந்த இடத்தில் திராவகப்புட்டி தவறி விருந்து உடைந்ததால் வண்டியில் தீப் பற்றிக்கொண்டது. இதைக் கண்ட புகையிரதப்பகுதி அதிகாரியொருவர் எடிஸன்மீது மிக்க கோபம்கொண்டு அவரை அறைந்தார். இதனல் எடிஸனின் காது செவிடாகிவிட்டது! அன்றுமுதல் பத்திரிகைத் தொழிலைத் துறந்து, புகையிரத தந்திக்காரியாலயத்தில் வேலையொன்றில் அமர்ந்தார். அப்பொழுது எடிஸனுக்கு வயது பதினறு இருக்கும். வேலைசெய்யும்பொழுதே, எடிஸன் மின்சாரம், இரசாயனம் சம்பந்தமானவற்றைப் படிப்பதில் ஈடுபட்டார். தமக்குக் கிடைக்கும் சொற்ப பணத்தைக்கொண்டு, நியூஜேர்ஸி என்ற இடத்தில் ரசாயன சாலை ஒன்றை நிறுவி ஆராய்ச்சி நடத்தத் தொடங்கினர். இவ்வாராய்ச்சியின் பயனக ஒரு புதிய தந்திக்கருவியைச் செய்து, 8000 பவுண் பரிசும் பெற்றுர்.

இப்பெருந்தொகை, புதிய கருவிகளைப்பற்றி ஆராய்ச்சிகள் நடாத்துவதற்குப் பயன்பட்டது. புதிய கருவிகளைத் தாமே செய்து விற்பதற்காக ஒரு பெரிய தொழிற்சாலையையும் அமைத்தார். இவ்வேளையில், எடிஸனின் புகழ் தேசமெங்கும் பரவத்தொடங்கிவிட்டது.

மின்சாரவிளக்கைக் கண்டுபிடிக்கும்பொழுது, எடிஸனுக்கு வயது முப்பதுதான். தற்காலத் தந்திக்கருவி, டைப் அடிக்கும் இயந்திரம், மின்சார ரயில் என்ஜின், புகைப்படம் பிடிக்கும் கருவி முதலியவை எடிஸன் கண்டுபிடித்தவை

(8-ம் பக்கம் பார்க்க)

'மாணவர் மலர்' பகுதிக்கு கதை, கட்டுரைகள் எழுதி அனுப்புபவர்கள், தாளின் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

'அன்புள்ள நண்பன்...' பகுதிக்கு கடிதம் எழுதுபவர்கள், வார முடிவுக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் நலம்.

'மாணவர் மலர்'
'ஈழநாடு'
த. பெ. 49
யாழ்ப்பாணம்

## உங்களுக்குத் தெரியுமா?



இவர் ஓர் அமெரிக்கர். 'மிக உயரமானவர்' எனக் கருதப்படும் இவரது உயரம் எட்டு அடி ஒன்பதரை அங்குலமாகும்! ரேபர்ட் வட்லோ என்பது இவரது பெயர்.

# சந்தேகம் தீருங்கள்

—ஜி. எம்.

செல்வி. க. பூவா, உருத்திரபுரம்.
கேள்வி: ஓணன்களில் எத்தனை வகையுண்டு? சில ஓணன் பச்சை நிறமாக இருப்பதேன்?
பதில்: ஓணன்களில் இருவகையுண்டு. சில ஓணன் பச்சை நிறமுடையதாகவும், சில பழுப்பு நிறமுடையதாகவும் இருக்கின்றன. பழுப்புநிற ஓணன் வேலிகளிலும், பச்சைநிற ஓணன் பச்சை நிற இலைகளிலும், மரங்களிலும் வசிக்கும்

* *

எஸ். தனலட்சுமி, உடுப்பிட்டி.
கேள்வி: ஐசாக் நியூட்டன் என்ற விஞ்ஞானி எத்தனையாம் ஆண்டில் புகழுடம்பெய்தினர்? அரிஸ்ரோற்றல் எந்த நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானி?
பதில்: ஐசாக் நியூட்டன் 1727ம் ஆண்டில் இவ்வுலகவாழ்வைத் துறத்தார். அரிஸ்ரோற்றல் ஒரு கிரேக்க விஞ்ஞானி.

∴ ∴

வி. எம். சிவசுப்பிரமணியம், கரவெட்டி.
கேள்வி: "நெல்லிக்கனி" பொதுவிஞ்ஞானத் துறையில் என்ன பெயருடன் வழங்கப்படுகிறது?
பதில்: பைலன் தஸ எம்பிலிக்கா.

∴ ∴

செ. இராசரத்தினம், கரவெட்டி.
கேள்வி: ரஷ்யப் பிரதமர் குருஷ்சேவ் எவ்வாறு பதவிக்கு வந்தார்? இவருக்கு முன்பிருந்த பிரதமர் யார்? அவர் இப்போது என்ன செய்கிறர்?
பதில்: ஒரேதடவையில் பல கேள்விகளைக் கேட்டுவிட்டீர்கள். குருஷ்சேவ், அதிகாரத்தைக் கைப்பற்றியதும் பிரதமரானர். குருஷ்சேவிற்கு முன்னர், புல்கானின், ரஷ்யப்பிரதமராக இருந்தார். புல்கானின் ஒரு தொழிற்சாலை மனேஜராகக் கடமையாக்றுகிறர்.
கேள்வி: மோட்டார் வாகனங்களில் பிரயாணம் செய்யும் பொழுது, எனக்கு வாந்திவருகின்றது. இதனை எவ்வாறு போககலாம்? சுலபமான வழி ஒன்றைக்கூறுங்கள்.
பதில்: பிரயாணம் செய்யும்பொழுது நீங்கள் ஒரு தேசிக்காய் கைவசம் வைத்திருப்பது நல்லது! வாந்திவரும் சமயம் எலுமிச்சம்பழத்தை நன்ருக மணக்கவும்.

∴ ∴

க. யோககந்தரராசா, சி. சண்முகராசா, கன்னுகம்
கேள்வி: பி. சி. ஜி. யைக் கண்டுபிடித்தவர் யார்?
பதில்: இதை பஸில்லஸ் கல்மேட் என்பவரும், கைறின் என்பவரும் கண்டுபிடித்தனர்.

∴ ∴

ஆ. கந்தையர், கைதடி கிழக்கு.
கேள்வி: உலகின் சனத்தொகை எவ்வளவு?
பதில்: 300 கோடி.
கேள்வி: உலகில் எத்தனை மதங்கள் உள?
பதில்: உலகில் சுமார் 1010 மதங்கள் இருப்பதாகக் கணக்கெடுத்திருக்கிறர்கள்.

∴ ∴

ஆர். சந்திரா, யாழ்ப்பாணம்.
கேள்வி: கூசாவிலுள்ள நீர் குளிராக இருப்பதேன்?
பதில்: கூசாவின் நுண்துளைகளினூடாகக் கசிந்து வெளிவரும் நீர், ஆவியாவதற்கு வேண்டிய வெப்பத்தை உள்ளிருக்கும் நீரிலிருந்து எடுத்துக்கொள்கிறது. உள்ளிருக்கும் நீர் வெப்பத்தை இழப்பதினல், குளிர்ச்சியடைகிறது. இதன் காரணமாகவேதான் கூஜாவிலுள்ள நீர் குளிர்கிறது.

∴ ∴

மாலதி சிவசம்பு, சண்டிலிப்பாய்.
கேள்வி: பறக்கும் விமானத்தைக் கண்டுபிடித்த றைட் சகோதரர்கள் எங்கு, எத்தனையாம் ஆண்டு, என்ன திகதியில் தங்களது முதலாவது பரீட்சையை நடத்தினர்கள்? என்ன வேகத்தில் பறந்தது?
பதில்: றைட் சகோதரர்கள், 1903-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17ந் திகதி கிற்றிஹோக் என்ற இடத்திலுள்ள வடகரோலின கரையோரப்பகுதியில் தங்களது முதலாவது பரீட்சையை நடாத்தினர்கள். 121 அடி தூரத்தை 12 செக்கண்டுகளில் அவரது விமானம் கடந்தது!

∴ ∴

எஸ். கருணுகரன், பண்டைத்தரிப்பு.
கேள்வி: பாண்டவருள் மூத்தவர் யார்? எந்த நாட்டை ஆட்சி செய்தார்?
பதில்: பாண்டவருள் மூத்தவர் பெயர் உதிட்டிரன். குருநாட்டை ஆட்சி செய்தார்.

∴ ∴

லலிதா, பத்மினி, கோமளா, பருத்தித்துறை.
கேள்வி: கும்பகருணன் யார்? இராவணனை விடப்பெரியவனு?
பதில்: இராவணனின் தம்பிதான் கும்பகருணன். உருவத்தில் கும்பகருணன் பெரியவன் என கம்பர் வர்ணித்துள்ளார்.

∴ ∴ ∴

எம். சாந்தா, கீரப்பனை, சம்பனை.
கேள்வி: ஒரு சராசரி மனிதனுடைய இருதயம் ஒருநாளில் எத்தனை முறை துடித்துக்கொள்கிறது?
பதில்: 103,680 முறை துடித்துக்கொள்கிறது.

∴ ∴

கௌசி துரைசிங்கம், கோண்டாவில்.
கேள்வி: உலகில் எத்தனைவித மீன்கள் இருக்கின்றன? பறவை இனங்கள் எத்தனை?
பதில்: சுமார் 7,328 இனங்கள் மீன்களும், 9,718 இனங்கள்பறவைகளும் இருப்பதாகக் கணக்கெடுத்துள்ளார்கள்.

∴ ∴

த. தங்கராசா, உடுப்பிட்டி.
கேள்வி: ஒன்றுக்கு மேற்பட்ட கேள்விகளைக் கேட்டாலும் பதிலளிப்பீர்களா?
பதில்: நல்ல கேள்வியாக இருந்தால், எத்தனை கேள்விகளுக்கும் பதில் கிடைக்கும்.

# யாழ்ப்பாணத்தில் மாட்டுவண்டி சவாரிப் போட்டி

உடுவில், ஞாயிறு

வலிகாமம் வடக்கு சனசமூக நிலையங்களின் சமாசத்தின் ஆதரவில் மே மாதம் 12-ம் திகதி சனிக்கிழமை யாழ்பாணம் முற்றவெளி மைதானத்தில் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியொன்று நடைபெறவிருக்கிறது. இதற்கான ஏற்பாடுகளைச் சமாச நிர்வாகிகள் செய்துவருகின்றனர். நேற்றுமாலை சுன்னாகம் சனசமூகநிலைய மண்டபத்தில் நடைபெற்ற சமாச நிர்வாக சபைக் கூட்டத்தில் இதற்கான ஏற்பாடுகள் பற்றி ஆலோசிக்கப்பட்டது.

சமாசப் போஷகர் திரு. வி. வி. சண்முகம் இக் கூட்டத்திற்குத் தலைமைவகித்தார். சமாசச் செயலாளர் திரு. த. துரைசிங்கம் போட்டிக்கான விபரங்களை எடுத்துரைத்தார். போட்டியில் முதல் மூன்றிடங்களைப் பெறும் மாட்டு வண்டிச் சொந்தக்காரர்களுக்கு விசேஷ பரிசில்கள் வழங்குவதென முடிவு செய்யப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் பலபாகங்களிலுமுள்ள மாட்டு வண்டிச் சொந்தக்காரர்களை இப் போட்டியில் கலந்து கொள்ளுமாறு கோருவதெனவும் முடிவு செய்யப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்கும் பொருட்டுச் சமாச விளையாட்டுப் பகுதித் தலைவர் திரு. இ. இளையதம்பி தலைமையில் ஐவர் கொண்ட செயற்குழுவொன்றும் நியமிக்கப்பட்டது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

செவ்வாய் 3-4-62

காலை 6-45 உதய கீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரை இசை, 8-00 வயலின், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 திரை இசை, 6-15 கிராம சஞ்சிகை, 6-45 புல்லாங்குழல்.

இரவு 7-00 நேயர் விருப்பம், 7-30 'அடிசாய்ந்த முடிமன்னன்'—நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 இசைச் சித்திரம், 9-45 பி. சுப்புசாமி—நாகஸ்வரம்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15.)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 ஈ. எஸ். ஸ்ரீ கண்டன்—பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 கதம்பம், 1-50 வாத்திய இசை, 2-10 தொழிலைத் தேர்ந்தெடுக்க—மாணவர் நிகழ்ச்சி, 2-30 ஈ. எஸ். ஸ்ரீகண்டன்—பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 பேச்சு, 7-45 கஞ்சனூர் எஸ். தனம்மாள்—பாட்டு, 9-15 மணிவிழா (சென்னை அஞ்சல்), 9-30 நாட்டுப் பாடல்கள், 9-50 ஒலிஏடு (சென்னை அஞ்சல்).

# தேயிலை ஏற்றுமதி

கொழும்பு, திங்கள்

கடந்த ஆண்டின் தேயிலை ஏற்றுமதி வேலைகளில் நூற்றுக்கு 56.7 விகதத்தைத் திருக்கோணமலைத் துறைமுகம் மேற்கொண்டது.

மொத்தமாக 46 கோடி ரூத்தல் ஏற்றுமதியான தேயிலையில் 24 கோடி ரூத்தல் தேயிலை திருக்கோணமலைத் துறைமுகத்தினூடாக ஏற்றுமதியானது. 10 கோடி ரூத்தல் தேயிலை காலித் துறைமுகத்தினூடாக ஏற்றுமதியாயிற்று.

# அல்ஜியர்ஸில் 20 பேர் பலி

அல்ஜியர்ஸ், ஏப். 2

அல்ஜியர்ஸிலும் ஓரானிலும் அல்ஜீரிய விடுதலை எதிர்ப்பு இயக்கத்தினரான இரகசிய இராணுவ ஸ்தாபனத்தினரின் பலாத்கார நடவடிக்கைகளினால் நேற்று 20 பேர் கொல்லப்பட்டனர். 17 பேர் காயமடைந்தனர்.

இதே சமயம் இரகசிய ராணுவ ஸ்தாபனத்தினருக்கெதிரான நடவடிக்கைகளில் பிரஞ்சு பாதுகாப்புப் படையினர் தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர். பிரஞ்சு பாதுகாப்புப் படையினர் வீடுவீடாக நடத்திய சோதனைகளில் பெருந்தொகையான ஆயுதங்களும் பிளாஸ்டிக் வெடிகுண்டுகளும் துண்டுப் பிரசுரங்களும் கைப்பற்றப்பட்டன.

# சர்வோதய இயக்க மூலம் பிரச்சினைகள் தீரும்

## வவனியாவில் சர்வோதய இயக்க தலைவர் பேச்சு

வவனியா, திங்கள்

"நான் 24 பாஷைகள் பேசக்கூடியவரும் சர்வோதய ஸ்தாபகருமான விநோபாஜியின் சீடனாக இருந்தும் உங்கள் மத்தியில் தமிழ்மொழியில் பேச முடியாததையிட்டு வருந்துகின்றேன். ஆனால் சர்வோதயத்தில் ஈடுபட்டுள்ள நான் அடுத்தமுறை வவனியாவுக்குச் சமுகமளிக்கையில் உங்கள் பாஷையாகிய தமிழில் பேச முற்படுவேன்" என்று வவனியா அரசாங்க அதிபர் திரு. எம். செனிவிரத்தின தலைமையில் நடைபெற்ற சிரமதான இயக்க விழாவில் பங்குபற்றிய விநோபாஜியின் சீடரான திரு அரியரத்தின கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:-

எங்கள் நாட்டில் உள்ள பிரிவினைகள், பிரச்சினைகள், மற்றும் உலகப் பிரச்சினைகள் என்பனவற்றை விநோபாஜி காட்டிய சிரமதான இயக்கம் சர்வோதய இயக்கம் மூலம் தீர்த்து விடலாம்.

முதலில் பூதான இயக்கமாக ஆரம்பித்துப் பின் கிராமதானமாகி விருத்தியடைந்து பின் வளர்ச்சியடைந்து பொதுஉடைமை தானமாகிஅதுவும் விருத்தியடைந்து சமூக சம்பத்தானமாகிக் கடைசியில் இன்று சர்வோதயமாக வளர்ந்துவிட்டது.

"ஜனநாயகம் என்றால் பலம் கூடியவர்கள் பலம் குறைந்தவர்களையும் சேர்த்து அவர்களுடைய உரிமைகளையும் மதித்து அவர்களுக்கு உரிமைகளைக் கொடுத்தல்" என்று மகாத்மா கூறினர். இதுதான் உண்மையான ஜனநாயகம.

இதேபோல் மக்களில் பணக்காரர்—வறியவர் என்றிருந்தால் வாழ்க்கை இலட்சியம் ஒரு பலனையும் கொடுக்க முடியாது. இதற்காகவே பணம் படைத்தவர்கள் பணம் இல்லாதவர்களையும் தமதுநிலைக்குக் கொண்டுவரமுயலவேண்டும். இதுதான் சர்வோதயம்.

இலங்கையின் இன்றைய சமூகப் பிரச்சினைகளை இப்பேற்பட்ட சிரமதானமூலம் நாம் நிவிர்த்தியாக்கிக் கொண்டு வருகின்றோம். எங்கள் 50 சிங்களத் தொண்டர்கள் மட்டக்களப்பில் உள்ள பனிச்சங்கம்குளம் என்னும் இடத்தில் அங்குள்ள மக்களுடன் ஒன்றுசேர்ந்து அக்கிராம மக்களுக்கு வேண்டிய தொண்டைச் செய்தோம்.

வவனியாத் தமிழ்ப் பிரிவுக் காரியாதிகாரி திரு. டி. முருகேசபிள்ளை, வவனியா அரசாங்க அதிபர் திரு. எம். செனவிரத்தின, திரு.சுந்தையா ஆகியோரும் பேசினர்.

---

புதுடில்லி, ஏப்ரல் 2

கேன்ஸ், கார்லோவிவேரி ஆகிய இடங்களில் நடைபெறவிருக்கும் சர்வதேச திரைப்பட விழாக்களில் திரையிடப்படுவதற்கு இந்தியாவிலிருந்து மூன்று இந்திப்படங்களும் மூன்று வங்காளிப்படங்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.


கெட்டியான உணவு அருந்துவதற்கு





உங்கள் குழந்தையை சிறந்த முறையில் பழக்கிவிட்டீர்களா?



அப்படியாயின் நீங்கள் ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டியவை இவையே

★ ஐந்து மாதங்களுக்குப்பின் தாமதிக்காது கெட்டியான உணவை சேர்த்துக் கொடுக்க வேண்டும்.

★ உணவைமாற்றும் பொழுது படிப்படியாக மாற்ற வேண்டும்.

★ நன்ருகச் செரிக்கக்கூடிய கெட்டியான உணவை முதலில் தேர்ந்தெடுக்க வேண்டும்.

மூன்றிலிருந்து நான்கு மாதங்கள்தான் அநேகமாக கெட்டியான உணவு சேர்த்துக் கொள்ளவேண்டிய காலம். 50வருடங்களுக்கு மேலாக பார்லீஸ் தான் பாலுடன் சேர்த்து ஊட்டக்கூடிய கெட்டியான உணவும் இலகுவில் செரிக்கக் கூடியதும் என தாய்மார்கள் உணர்ந்து வந்துள்ளார்கள்.

பார்லீஸ் தானியப்பொருள்கள், கனிப் பொருள்கள் விட்டமின் சத்து இவை சமமாக உடைய உணவு. இந்த உணவு மிகவும் இலகுவாக செரித்துவிடும்.

பார்லீஸ் தயாரிப்பதற்கு மிகவும் இலகுவானது. சூடான பாலுடன் கலக்கவேண்டியது. அவ்வளவுதான்.

பார்லீஸ்

குழந்தைகளின்

முதல் கெட்டியான உணவு

## ஒளியின் தந்தை...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

களே. எனினும் மின்சார விளக்கே எடிஸனுக்கு அழியாப் பெருமையை ஈட்டிக் கொடுத்தது. நியூயோர்க் நகரில் முதலாவது மத்திய மின்சார நிலையத்தை நிறுவிய புகழ் எடிஸனையே சாரும்.

ஒருநாள் ஒரு கருவியை அமைத்துக்கொண்டிருக்கும் பொழுது, மனிதனுடைய பேச்சொலியை அப்படியே பிரதிபலித்துக் காட்டலாமென்ற எண்ணம் அவருக்குத் திடீரென்று உண்டாகியது. மூன்று நாள் ஆராய்ச்சியின் பின்னர் அதில் வெற்றிகண்டார். இதைத்தான் கிராமபோன் என்று சொல்லுகிறோம். ஏழையாகவும், இளம்பருவத்தில் செவிடாகவும் இருந்தபோதிலும் விடாமுயற்சியினாலும், ஊக்கத்தினாலும் உயர்ந்த பதவியை எடிஸன் அடைந்தார். "முயற்சி திருவினையாக்கும்" என்பதற்கு எடிஸன் வரலாறு தக்க சான்று தருகிறது!

அடுத்தவாரம், வைரம், முத்து ஆகியவற்றின் இரகசியத்தை அறிவீர்கள்.

## கிளிநொச்சி கொலைவழக்கில் எதிரிக்கு மரணதண்டனை

யாழ்ப்பாணம், திங்கள்

சென்ற வருடம் மார்ச் மாதம் 27-ம் திகதி மாரிமுத்து சுப்பையா என்பவரைக் கொலை செய்ததாக கேசவன் பெருமாள் என்பவர்மீது குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில், நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா, கியூ. ஸி. எதிரிக்கு இன்று மரண தண்டனை விதித்தார்.

எதிரி தரப்பில் திரு. எஸ். மகேசனின் அனுசரணையுடன் திரு. எஸ். நாகராசா ஆஜரானார். அரசாங்கத் தரப்பில் திரு. ஆர். கோபாலரத்தினம் ஆஜரானார்.

நீதியரசர் தீர்ப்பளித்துபேசுகையில், ஜூரிமாரின் தீர்ப்பின்படி மரண தண்டனைதான் விதிக்கமுடியுமென்றும், எதிரிக்கு ஆத்திரமூட்டக்கூடிய வகையில் ஏதோ நடந்திருக்கிறது என்று தாம் எண்ணுவதாகவும் கூறினார்.

எதிரியிடம் நீதியரசர் "ஏதும் கூற விரும்புகிறீரா?" என்று கேட்டபொழுது, தாம் ஒன்றும் சொல்வதற்கில்லை என்றும், தன்னை மன்னிக்கும்படியும் எதிரி கூறினார்.

## புதிய பம்பாய் மேயர்

பம்பாய், ஏப்ரல் 2

1962-63-ம் ஆண்டுக்கு பம்பாய் மாநகர மேயராக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நாகின்தாஸ் என். ஷா தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருடன் போட்டியிட்ட கம்யூனிஸ்ட் அபேட்சகர் தோல்வியடைந்தார்.

## ஆசியக் கல்வி மந்திரிகள் மகாநாடு

டோக்கியோ, ஏப்ரல் 2

டோக்கியோவில் இன்று ஆரம்பமான ஆசியக் கல்வி மந்திரிகள் மகாநாட்டில், இலங்கையின் சார்பாக கல்வி மந்திரி திரு பதியுதீன் முகமது கலந்துகொண்டார். ஏப்ரல் 7-ம் திகதி வரை இம் மாகாநாடு நடைபெறும்.

## தற்கொலை

வேலணை, திங்கள்

வேலணை கிழக்கைச் சேர்ந்த முத்துத்தம்பி இரத்தினம், (வயது 40) என்பவர் மனவருத்தத்தின் காரணமாக நச்சுத்திரவகம் அருந்தி தற்கொலை செய்து கொண்டார். திடீர் மரண விசாரணை அதிகாரி, தற்கொலையென தீர்ப்பளித்தார்.

## "ஆங்கிலம் ஒரு சர்வதேசமொழியாகும்"

—ஐ. நா. ஆலோசகர்

ஜா-எலை, திங்கள்

"ஆங்கிலம் ஒரு சர்வதேச மொழி மட்டுமின்றி தொழில் நுட்ப மொழியுமாகும். பொருளாதார, தொழில் நுட்ப அபிவிருத்திக்கு ஆங்கிலம் ஒரு அத்தியாவசியமான மொழியுமாகும்." என்று ஸ்ரீமன் கத்தோலிக்க பாடசாலையில் நடைபெற்ற ஜா-எலைப் பகுதி ஆங்கில ஆசிரியர்களின் பொதுக் கூட்டத்தில் ஐ. நா. கல்வி சமூக கலாச்சார ஸ்தாபன ஆலோசகர் திரு. சி. ஜே. அலென் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசியதாவது:-

"பிரிட்டிஷாருக்கு மாத்திரம் ஆங்கில மொழி சொந்தமல்ல. அது ஒரு உலக மொழியாகும். சோவியத் ரஷ்யாவில், 700-க்கு அதிகமான ஆங்கில போதனா பாடசாலைகள் உண்டு. அங்கு ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அதுமட்டுமின்றி இந்தியாவில்கூட, குழந்தைகளுக்கு ஆங்கிலம் கற்பிப்பதில் போதிய கவனம் எடுக்கப்படுகிறது. அங்கு, எல்லாப் பாடசாலைகளிலும், மூன்றாம் வகுப்பிலிருந்தே ஆங்கிலம் கற்பிக்கப்பட்டுவருகிறது.

இந்தியாவில், ஆங்கிலத்தில் பயிற்றப்படாத சுமார் 25,000 ஆசிரியர்கள் இருக்கிறார்கள். ஆனால், இலங்கையில் 850 பயிற்றப்படாத ஆசிரியர்கள் உண்டு. ஆங்கிலத்தைப் போதிப்பதற்காக, இலங்கையில் வருடா வருடம், சுமார் 750 ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்கப்படுகிறது. இவர்களில், 550 பேருக்கு குரு வித்தியாலயத்திலும், 200 பேருக்கு பலாலி, மகாரகமவில் உள்ள பயிற்சிக் கல்லூரிகளிலும் பயிற்சியளிக்கப்படுகிறது."

## '15 வருடங்களாக ஸ்ரீ நேரு கடுமையாக உழைத்தார்'

### அமெரிக்காவில் ஸ்ரீமதி விஜயலட்சுமி பேட்டி

வாஷிங்டன், ஏப்ரல் 2

இந்தியப் பிரதமர் திரு. நேருவின் சகோதரி ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் அமெரிக்காவில் சொற்பொழிவாற்றுமுகமாக இங்கு வந்துள்ளார். தனது சகோதரர் சுகவீனமுற்றிருக்கும் இச்சமயத்தில் அமெரிக்கா வருவதற்கு விருப்பமில்லாதபோதிலும், ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டப்படியே தாம் வந்திருப்பதாய் ஸ்ரீமதி பண்டிட் கூறினார்.

திரு. நேரு, 1947-ம் ஆண்டு இந்தியா சுதந்திரம் பெற்றது முதல், வார விடுமுறையோ அல்லது வேறு சிறு ஓய்வோ பூரணமாக எடுத்துக்கொள்ளவில்லை என்றும், அதற்கு மாறாக ஓய்ச்சல் ஒழிவின்றி அவர் தொடர்ந்து கடுமையாக உழைத்து வந்தார் என்றும் அவர் நிருபர்களிடம் கூறினார். திரு. நேரு வெளிநாடு செல்லும்போது தான் தமது ஓய்வு கிடைக்கிறது எனக் கூறுவார் என்றும் ஸ்ரீமதி பண்டிட் தெரிவித்தார்.

நேருஜியின் புதல்வி ஸ்ரீமதி இந்திரா காந்தியும் ஒரு மாதம் அமெரிக்கச் சுற்றுப்பிரயாணத்தை மேற்கொண்டிருக்கிறார். ஸ்ரீமதி இந்திராவின் மூத்த புதல்வன் ராஜீவும் தாயாருடன் சென்றுள்ளார்.

## தேளுடன் தேனீர் தயாரித்தார்!

சென்னை, ஏப்ரல் 2

உணவுப் பாத்திரங்களை 'சுத்தமாக' வைத்துக்கொள்ளாததன் பயனை கோடம்பாக்கத்தைச் சேர்ந்த ஒரு தாயும் அவரது 3 குழந்தைகளும் அனுபவிக்கலாயினர்.

திருமதி வேதநாயகி என்ற மாது தனது வீட்டில் தேனீர் தயாரித்தார். பாத்திரத்தின் உள் தேள் ஒன்று இருந்ததை அவர் கவனிக்கவில்லை. தயாரித்த தேனீரில் தேளும் வெந்து செத்தது. தானும் குடித்து குழந்தைகளுக்கும் கொடுத்தார். சிறிது நேரத்தில் எல்லோருக்கும் வாந்தி கண்டது பிறகு உண்மை நிலவரம் பிடிபட்டது. தேயிலையுடன் தேளையும் கொதிக்க வைத்து குடித்த இந் நால்வரும் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகின்றனர்.

## 4 லட்சம் தடவை ஊட்டும் வாதநோய் மருந்து

### ரஷ்யாவிடமிருந்து இலங்கை வாங்கியுள்ளது

கொழும்பு, திங்கள்

மாஸ்கோவிலுள்ள இலங்கைத் தூதர் திரு டி. பி. சுபசிங்கா மூலமாக சுகாதார அமைச்சு, மாஸ்கோவிலுள்ள சோவியத் அரசாங்கத்தின் ஒரு ஏஜன்ஸியிடமிருந்து 400,000 வாதநோய் தடுப்பு ஊட்ட மருந்தை விலைக்கு வாங்கியுள்ளது.

இலங்கையில் இப்போது வழக்கத்துக்கு மாறாகப் பரவியுள்ள இளம்பிள்ளை வாத நோயை தடை செய்வதற்கு இப்பொழுதுகைவசம் போதிய வாதநோய் தடுப்பு மருந்தில்லையென்று சுகாதார அமைச்சு சோவியத் அதிகாரிகளுக்கு விண்ணப்பித்ததின் பேரிலேயே இம்மருந்து இங்கு அனுப்பப்பட்டுள்ளது.

கனடாவிலுள்ள ஒரு வைத்தியஸ்தாபனத்திடம் 200,000 வாதநோய் தடுப்பு மருந்து விலைக்கு அனுப்பும்படி இலங்கை அரசாங்கம் கேட்டுள்ளது. இம்மருந்தை ஒட்டாவாவிலுள்ள இலங்கை ஹைகமிஷனர் மூலமாக, சுகாதார அமைச்சு பெற்றுக்கொள்ளும்.

100,000 வாதநோய் தடுப்பு மருந்தை இலங்கைக்கு நன்கொடையாக அளிக்க அமெரிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இந்த மருந்து கூடிய விரைவில் இங்குவந்து சேரும் என எதிர்பாக்கப்படுகிறது.

நேற்றுப் பிற்பகல் 5 மணி வரை, கொழும்பு குழந்தைகள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள வாதநோயினால் பீடிக்கப்பட்டவர்களின் மொத்தஎண்ணிக்கை 229 ஆகும் தெஹியோவிற்றவிலிருந்து ஒருவரும், வென்னப்புவ என்ற இடத்திலிருந்து ஒருவருமாக மொத்தம் 11 பேர் புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பிரதம வைத்திய அதிகாரி டாக்டர் வி. நடராஜா தெரிவிக்கையில், நகரமண்டபத்தில் எவருக்கும் வாதநோய் தடுப்பு மருந்து கொடுக்கப்பட மாட்டாதென்றும், போதிய வாதநோய் தடுப்பு மருந்து கைவசம் கிடைத்ததும், முன்பிருந்த மாதிரி நகரமண்டபத்தில் தடுப்பு மருந்து கொடுக்கப்படுமென்றும் கூறினார்.

ருகலை என்ற இடத்துக்கருகிலுள்ள அலகத்தன என்ற கிராமத்தைச் சேர்ந்த ஒருவருக்கு, வாதநோய் கண்டிருப்பதாக சந்தேகித்து, சனிக்கிழமை நுவரேலியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## ஒரு நயா பைசா மணியார்டர்

கிழக்காஞ்சேரி, ஏப்ரல் 2

கேரளத்திலுள்ள கிழக்காஞ்சேரி என்ற ஊரில் ஒரு உயர் நிலைப் பள்ளி ஆசிரியர் ஒரு நயாபைசா மணியார்டர் அனுப்பியிருக்கிறார்.

ஒரு காசு மணியார்டர் செய்ய 15 காசு கமிஷனாகும். இந்திய தபால் அலுவலகங்களில், இவ்வளவு குறைந்த தொகை இதுவரை மணியார்டர் செய்யப்பட்டதில்லை. என்று சொல்லப்படுகிறது.

அம்பை, ஏப்ரல் 2

அடைச்சாணி கிராமத்துக்கும் காக்க நல்லூருக்கும் இடையிலுள்ள ஒலிட பொத்தையில் 4 சிறுவர்களிடம் ஒரு தங்கவளையம் அகப்பட்டது. இச் சிறுவர்கள் மாடு மேய்க்கபபோனபோது இது அகப்பட்டதாகவும், இதைத் தங்கள் வீட்டுக்குப் போய் பங்கு போட்டுக் கொண்டதாகவும் சொல்லப்படுகிறது.

இவர்களில் மூத்தயா என்ற சிறுவனுக்கு மட்டும் பங்கு கிடைககாமற்போய் விட்டதால் அப்பையனின் தகப்பனார் மேலதிகாரிகளிடம் இந்தகவலைத் தெரிவித்தாரம். பொலிஸார் விசாரித்து ரூ 5000 பெறுமானமுள்ள 76 களஞ்சி தங்கத்தைக் கைப்பற்றினர்கள் எனக் கூறப்படுகிறது. பேலும் இத் தங்கம் பத்தரைமாற்றுத் தங்கமாம்.


இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி பிளாஸா நவா
(கொழும்பு) (வெள்ளவத்தை) (கும்பனித்தெரு)

வெலிங்டன் விஜயா
(யாழ்ப்பாணம்) (மட்டக்களப்பு)

பல வீரதீரச் செயல்கள் நிறைந்த சிறந்த கலர் படம்!
பார்த்து பயன் அடையுங்கள்!



சித்திரா • அசாத்
கிருஷ்ணகுமாரி
நடித்த
ஜிம்போ
(தமிழ், முழுநீள கேவா கலர்ப் படம்)

மனோகரா (யாழ்ப்பாணம்)
2-4-62 திங்கள் முதல்
மாலை 6-30 இரவு 9-30 க்கு
ரீட்டா ரத்னையக்கா, புளோரிடா ஜெயலத், ஹேர்பி செனிவரத்ன
மற்றும் பலர் திறம்பட நடித்த
தருவ ககெத
(சிறந்த சிங்களம் பேசும் படம்)

சனி, ஞாயிறு காலை 10-30 மணிக்கும் கிழமை நாட்களில் மாலை 4-15 க்கும்
காரோல் லின்லே நடித்த
ரிடேர்ன்டு பேடோன் பிளேஸ்
(ஆங்கிலம்)
RETURN TO PEYTON PLACE
(Cinemascope - Color by De Luxe)


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு ஏப்ரல்மாதம் 3-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது